# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜா
ம
க்
கா
ர
ன்
JAMAKKARAN

VOLUME - 1 ISSUE - 5

*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



**கர்த்தருக்குள் அன்பானவர்களே,**

**உங்கள் யாவருக்கும் எங்கள் புத்தாண்டு (2017)வாழ்த்துக்கள்.**

நாம் யாவரும் 2017 புதிய வருடத்திற்குள் பிரவேசித்திருக்கிறோம். உங்கள் யாவருக்கும் சமாதானமும் ஆரோக்கியமும் பெருகக்கடவது என்று வாழ்த்துகிறேன்.

2016 டிசம்பர் ஜாமக்காரனில் 20ம் பக்கத்தில் நான் குறிப்பிட்டிருப்பதுபோல நான் என் வாழ்க்கையில் முதன் முறையாக சற்று சுகயீனமாக இருந்தேன். கர்த்தர் என்னை சுகமாக்கி பெலப்படுத்தி மறுபடியும் அவருடைய ஊழியத்தை தொடர அனுமதித்தார். அவர் என்மேல் வைத்த நம்பிக்கைக்காக அவருக்கு ஸ்தோத்திரம் ஏறெடுக்கிறேன். நான் போகும் வழியை அவர் அறிவார். **அவர் என்னை சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்.** யோபு 23:10. **எனக்கு குறித்திருக்கிறதை அவர் நிறைவேற்றுவார்.** யோபு 23:14. இம்முறை Editorial ஆசிரியர் குறிப்பாக CPM(TPM) சபையின் பத்திரிக்கையில் வெளிவந்த செய்தியை தொகுத்து வெளியிட்டுள்ளேன். வாசித்து பயன் பெறுவீர்கள் என்று நம்புகிறேன்.

**உன் ஆண்டவரின் பிரியம் உன்மேல் இருப்பதாக!**

- நன்றி பெந்தேகோஸ்தே பேரொளி

நாட்களும் **வருடங்களும்** அதிவிரைவாய்க் கடந்துபோய்க்கொண்டிருக்கின்றன. தேவபிள்ளைகளாகிய நாம் மீண்டுமொரு **புதிய வருடத்திற்குள்** அடியெடுத்து வைக்கும்படியாகத் தேவன் நமக்கு அருள் செய்திருக்கிறார். தேவனுடைய மனிதனாகிய மோசே தான் எழுதிய சங்கீதத்தில் "உமது பார்வைக்கு **ஆயிரம் வருஷம்** நேற்று கழிந்த நாள் போலவும் இராச்சாமம்போலவும் இருக்கிறது". "**எங்கள் நாட்களெல்லாம்** உமது கோபத்தால் போய்விட்டது. **ஒரு கதையைப்போல்** எங்கள் வருஷங்களைக் கழித்து விட்டோம். எங்கள் **ஆயுசுநாட்கள்** எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது **வருஷமாயிருந்தாலும்....அது சீக்கிரமாய்க் கடந்துப்போகிறது**". "தேவரீர் எங்களைச்

# ஜனவரி 2017

சிறுமைப்படுத்தின நாட்களுக்கும் நாங்கள் **துன்பத்தைக் கண்ட வருஷங்**களுக்கும் சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும்'' (சங். 90:4,9,10,15) என்று சங்கீதக்காரன் கூறுகிறான். இவ்வேத பகுதிகளில் **''வருஷம்''-''வருஷங்கள்''** என்னும் வார்த்தைகள் **ஐந்து** முறை குறிப்பிடப்பட்டுள்ளன. 17 வசனங்கள் கொண்ட இந்தச் சங்கீதத்தை அவன் **''எங்கள் தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள்மேல் இருப்பதாக,** எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தும்! ஆம் எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தியருளும்'' என்ற **ஜெபத்துடன்** அந்த சங்கீதத்தை முடிக்கிறான். தேவ பிள்ளையே **கடந்து சென்ற வருடங்களைக்**குறித்து ''ஒரு கதையைப்போல் நாங்கள் எங்கள் வருஷங்களைப் கழித்துக்போட்டோம்'' அவை நாங்கள் சிறுமைப்படுத்தப்பட்டிருந்த நாட்கள் ஆகும். அந்த நாங்கள் துன்பங்களைக்கண்ட வருஷங்கள் என்பது போன்று இதை வாசிக்கின்ற நீ உணருகிறாயா? அவை எப்படியிருந்திருப்பினும் இனி **அத்துன்பங்கள்** உனக்கு ஒரு பொருட்டாயிருக்க வேண்டாம்! **புதிய தீர்மானங்களுடன்** புத்தாண்டுக்குள் அடியெடுத்து வைத்திருக்கும் நீ **பின்னானவைகளை** மறந்து முன்னானவைகளை நடக்ககடவாயாக. உன்னுடைய **சிறுமை**யும் துன்பங்களையும் **நீ மறந்து** இனிவரும் நாட்கள் **ஒரு கதையைப்போல** கழித்துப்போடப்படும் நாட்களாயிருக்ககூடாது என்பதைக் குறித்து மட்டும் நீ கவனமாயிருப்பாயாக. மோசேயைப்போல் ''நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, **எங்கள் நாட்களை எண்ணும் அறிவை** எங்களுக்குப்போதித்தருளும்'' (வச.12) என்று தேவனை நோக்கி நீ விண்ணப்பத்தை ஏறெடுப்பயாக.

ஒரு **தேவபிள்ளை** இவ்வுலகில் **வாழும் நாட்கள்** ஒரு கதையைப்போல கிழித்துப்போடப்படும் நாட்களல்ல. அவை பிறர் **வாசித்தறியும் நிருபங்களாய்** இவ்வுலகில் விளங்கவேண்டும். அவன் இவ்வுலகைவிட்டுக் கடந்துபோன பின்னரும் அவனது வாழ்க்கையானது பிறர் வாசித்துப் பின்பற்றக்கூடிய **ஒரு சரித்திமாய்** திகழ வேண்டும். ஆகவே 2017 **இப்புது வருடத்துக்குள்** அடியெடுத்துவைத்திருக்கும் நீ தேவமனிதனாகிய **மோசேயுடன்** சேர்ந்து **''எங்கள் தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள்மேல் இருப்பதாக''** (வச. 17) என்று தேவனை நோக்கி உத்தம இருதயத்தோடு வேண்டிக்கொள்வாயாக. ''எங்கள் தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள்மேல் இருப்பதாக'' என்று கூறப்பட்டிருப்பது. ஆங்கில மொழிபெயர்பில் ''எங்கள் தேவனாகிய ஆண்டவரின் **அழகு** எங்கள்மேல் இருப்பதாக'' ("Let the **beauty** of the Lord our God be upon us")என்று கூறப்படடுள்ளது. வேறு வார்த்தைகளில் கூறினாள். தேவனாகிய ஆண்டவர் **விரும்பும் அழகு** நம்மில் இருக்கும்போது. அவர் நம் மேல் பிரியமாயிருப்பார். தேவ பிள்ளையே! இப்புத்தாண்டில் உன் ஜெபமும் வாஞ்சையும் நாட்டமும் என் தேவனாகிய **ஆண்டவரின் அழகு** என்மேல் இருப்பதாக என்பதாயிருக்கட்டும்.

தேவனுடைய அதே **சாயலில்** உண்டாக்கப்பட்ட ஆதி மனிதன் பாவஞ்செய்தபடியால் தேவ சாயலை இழந்தான். அதன் பின் இவ்வுலகில் பிறந்த எல்லா மனிதர்களும் ''இதோ. நான் துர்க்குணத்தில் உருவானவன். என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்'' (சங். 51:5) என்று கூறக்கூடிய அவல நிலையிலானார்கள். இவ்விதம் ம**னிதன்** பாவியாக தேவனுக்குச் சத்துருவாக மாறிப்போனான். அப்படிப்பட்ட மனுஷன்மேல் தேவன் பிரியமாயிருப்பது எப்படி? அதற்காகவே பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுவைப் **பாவமாம்சத்தின்** சாயலாகவும் பாவத்தைப் போக்கும் **பலியாகவும்** இவ்வுலகத்திற்கு அனுப்பினார். (ரோமர் 8:31) எனவே **ஆண்டவராகிய பரம சேனையின் திரள் அந்தத் தூதனுடனேத் தோன்றி,**

"உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும். **மனுஷர்மேல் பிரியமும்** உண்டாவதாக என்று சொல்லி தேவனை துதித்தார்கள்"லூக்கா.2:13,14 தேவகுமாரனாகிய இயேசுவின் தியாக பலியை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொண்டு அவருடைய பிள்ளைகளாக மாற்றப்படுகிறவர்கள் பிதாவாகிய தேவனால் **"பிரியமான வருக்குள்"** அங்கீகரிக்கப்படுகிறார்கள்.(எபே. 1:5) அவர்கள்மேல் அவர் **பிரியங் கொள்ளுகிறார்.** -- (பெந்தேகோஸ்தே பேரொளி)

**கிறிஸ்மஸ் புது வருட வாழ்த்து அட்டையையும், காணிக்கையையும் அனுப்பிய யாவருக்கும் எங்கள் வாழ்த்துதலையும், நன்றியையும் அறிவிக்கிறேன். ஜாமக்காரன் வாசகர்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை புத்தாண்டு வாழ்த்துதல் தெரிவித்துக்கொள்கிறேன். தேவ கிருபை உங்களோடு இருப்பதாக.**

கர்த்தரின் பணியில்

**டாக்டர். புஷ்பராஜ்**

# கேன்சர் வியாதிக்காக விசேஷ ஜெபம்:

நம் இந்தியாவிலும், நான் சென்றுவந்த வெளிநாடுகளிலும் வீட்டுக்கு ஒருவராவது **கேன்சர்** என்ற வியாதியால் பாதிக்கப்பட்டிருப்பதை நேரில் கண்டறிந்து மிகவும் வேதனையடைந்தேன். ஆகவே **2017 மார்ச் 14ம் தேதி** இந்த குறிப்பிட்ட வியாதியால் பாதிக்கப்பட்டவர்களுக்காகவும்,பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காகவும் விசேஷ உபவாச ஜெபம் ஏறெடுக்கப்படும். கடந்த மாதமே இந்த ஜெப விவரத்தை உலகம் பூராவும் உள்ள வாசகர்களுக்கு அறிவித்துவிட்டேன். அதே தேதியில் கேன்சர் வியாதியால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் அவரவர்கள் இருக்கும் இடத்திலேயே உபவாசித்து என்னோடு ஜெபத்தில் இணைந்துக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

**உங்களில் இரண்டு பேர் எந்த காரியத்தைக் குறித்தாகிலும் பூமியில் ஒருமனப்பட்டிருந்தால் பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும்** என்று இயேசுகிறிஸ்து கூறினார். மத் 18:19

மார்ச் 14ல் கேன்சர் வியாதிக்காக மட்டுமல்லாமல், மற்ற வியாதிகளுக்காகவும், குடும்ப பிரச்சனைகளுக்காகவும் ஜெபம் ஏறெடுக்கப்படும். ஜெப குறிப்புகளை

**Dr.PUSHPARAJ**

**SALEM - 636 005. INDIA**

என்ற விலாசத்தில் கடிதம் எழுதலாம் அல்லது jamakaran@yahoo.com என்ற என் இமெயில்க்கும் ஜெபகுறிப்புகளை அனுப்பலாம். கர்த்தர்தாமே நம் யாவருடைய ஜெபங்களையும் கேட்டு சுகம் அளிப்பாராக. குடும்ப பிரச்சனைகளையும் தீர்த்து சமாதானம் கட்டளையிடுவாராக. ஆமென்.

# FMPB முதல் மிஷனரி விபரம்

FMPB யின் முதல் மிஷனரி பணித்தளமாகிய **பெரியமலை** என்ற ஆதிவாசிகள் பகுதிக்கு சென்ற முதல் மிஷனரிப்பற்றிய விவரம் Salvation TV சேனலில் காட்டினார்கள்.

முதல் மிஷனரிகளில் ஒருவரான **சகோ.ஹாரிஸ் ஹில்டன்** அவர்கள் உயிரோடு இருக்கும்போது அவருடன் செய்த **நேர்முக சம்பாஷையில் சகோ.ஹில்டன்** கூறுவதை நாங்கள் கேட்டோம்.

அதில் முதல் மிஷனரி பயணத்தில் மலையேறி செல்லும்போது முதலாவதாக சகோ.**எமில் ஜெபசிங்** அவர்கள் நடந்து **மலையேறி செல்ல** அவருக்கு பிறகு நடந்துசென்ற சகோ.**ஹாரிஸ் ஹில்டன்** கூறியதை பதிவு செய்துள்ளார்கள்.

### சகோ.ஹாரிஸ் ஹில்டன் அவர்கள் கூறியதாவது:

நான் மலையேற முடியாமல் மூச்சு வாங்க இரத்த வாந்தி எடுத்தவனாக சென்றேன். இப்படிப்பட்ட நிலையில் என்னால் ஊழியம் செய்ய முடியாது என்று நான் கூறியபோது என்னுடன் வந்த **டாக்டர்.புஷ்பராஜ்** அவர்கள் என்னிடம் பயப்படாதிருங்கள். உங்களுக்கான மருந்துகள் அனைத்தும் என்னிடம் உண்டு. உங்களுக்கு ஒன்றும் ஆபத்து உண்டாகாது என்று என்னை தைரியப்படுத்தியும் ஆறுதல் படுத்தியவாரும் என்னுடன்கூட பயணித்து நாங்கள் பணித்தளம் வந்து சேர்ந்தோம் என்று டிவியில் கூறுவதை நாங்கள் கேட்டோம்.

அப்படியிருக்க உங்களை எப்படி **டாக்டர்.டேனியல்** அவர்கள் FMPB சரித்திரத்தில் இருட்டிப்பு செய்தார் என்று எங்களுக்கு விளங்கவில்லை?

சகோதரனே! மேலே நீங்கள் எழுதியது கேள்வியா? **விமர்சனமா?** என்பது எனக்கு விளங்கவில்லை. அந்த பிரச்சனைகள் முடிந்துப்போன விஷயம், மறுபடியும் எதற்கு அதை கிளப்புகிறீர்கள்?.

சில மாதங்கள் மட்டுமே **பெரியமலை** ஊழியம் செய்து நானும் சகோ. ஹாரிஸ் ஹில்டனும் டேனிஷ்பேட்டை திரும்பிய விவரம் முழுவதையும் ஜாமக்காரனில் நான் எழுதியதை நீங்கள் வாசித்திருப்பீர்கள், அதன்பின் சகோ ஹாரிஸ் ஹில்டன் அவர்கள் மட்டும் திரும்ப **பெரியமலை** சென்று மிஷனரி பணியை வெற்றிகரமாகவும் முழுமையாகவும் முடித்தார்.

இப்போதும் **பெரியமலையில் செய்த முதல் மிஷனரி பயண ஊழியத்தை** என்னால் மறக்க முடியாமல் இருதயத்தின் ஆழத்தில் பதிய வைத்துள்ளேன்.

1970ல் நான் திருமணம் முடித்தேன். என் மகன், என் மனைவியின் வயிற்றில் முதல் மாத கருவாக உருவாகி இருந்த சமயம் என் மனைவிக்கு நான் செய்த **முதல் மிஷனரி** ஊழிய பணித்தளத்தையும், அங்கு தங்கி ஊழியம் செய்த **பன்றி குடிசையையும்** காண்பிக்க என் மனைவியை திருமணம் செய்த மூன்றாவது மாதத்தில் **என் புல்லட் மோட்டார்** சைக்கிளில் அமர செய்து அதே வண்டியில் **இலவச மருத்துவ முகாம்** நடத்த **மருந்து பெட்டிகளை** வண்டியின் பின்னால் கட்டி, சேலத்திலிருந்து சுமார் 200 கிலோ மீட்டர் துாரம் பயணம் செய்து **ஒசூர்** வழியாக **டெங்கனிக்கோட்டை** வழியாக சென்று அங்கிருந்து மலைப்பாதையில் புல்லட்டில் நீண்ட பயணம் செய்தோம். மிஷனரி பணித்தளமான **பெட்டாமுகுளாளம்** என்ற இடம் நெருங்க ஆரம்பித்தபோது மாலை 6-30 மணி ஆகிவிட்டது. இருள் வர ஆரம்பித்தது.



**மோட்டர் பைக் சூடு தணியும் வரை காத்திருந்தோம்.**



**நானும்,என் மனைவி திருமதி.மங்கள வதனியும் பெரியமலை கிராம மக்களுடன்**

**யானை கூட்டம்** வருகிறதாக வழியில் போகும் கிராம மக்கள் கூற என் வண்டியை அதிவேகமாக ஓட்டியதால் இஞ்ஜின் சூடாகிப்போனது. வண்டி மேடுஏற திணறியது. யானைகள் அருகே வருவதற்குள் மேடு ஏறி விடவேண்டும். ஆகவே என் மனைவியை கீழே இறங்கி வண்டியை பின்புறம் தள்ள சொல்லி நானும் வண்டியை தள்ளியவாறு மூச்சுவாங்க வேகமாக நடந்தோம். யாரோ இருவர் நாங்கள் படும்பாட்டை கண்டு அவர்களும் என் வண்டியை **மேடுவரை** தள்ளி உதவி செய்து மறைந்துபோனார்கள். இஞ்ஜின் சூடு தனியும் வரை அந்த மேட்டிலேயே நின்று பிறகு வண்டியை ஸ்டார்ட் செய்து இடம் வந்து சேர்ந்து, மறுநாள் நானும் என் மனைவியும் பலருக்கு சுவிசேஷம் அறிவித்து வைத்தியமும் செய்து சேலம் திரும்பினோம்.

என்னை மறுபடியும் நேரில் கண்ட **பெரியமலை** கிராம மக்கள் மிகவும் சந்தோஷப்பட்டனர், ஏற்கனவே அங்கு பழகிய பலருடைய வீடுகளுக்கு சென்று உள்ளே அமர்ந்து அவர்களோடு பேசி வந்தது, 2017 ஜனவரி மாத ஜாமக்காரன் பத்திரிக்கைக்கு செய்திகள் எழுதும்போது இந்த சம்பவங்களை ஞாபகப்படுத்தி தேவனை துதிக்கிறோம்.

# முக்கிய அறிவிப்பு:

**டாக்டர்.புஷ்பராஜ்(ஜாமக்காரன்) என்ற பெயரில் எனக்கு வாட்ஸ் அப்,பேஸ்புக் எதுவும் இல்லை. என் பெயரிலோ, ஜாமக்காரன் பெயரிலோ யாரைக்குறித்தாவது எழுதப்பட்டிருந்தால் அல்லது புகைப்படங்கள் வெளியிட்டிருந்தால் அதற்கும் எனக்கும் வாட்ஸ் அப்,பேஸ்புக்கில் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை இதன்மூலம் அறிவிக்கிறேன். அப்படி எதையாவது என் பெயரில் அல்லது ஜாமக்காரன் பெயரில் கண்டால் உடனே எனக்கு அறிவிக்கவேண்டுறேன். - டாக்டர்.புஷ்பராஜ்**

# யார் இந்த கிறிஸ்மஸ் தாத்தா ?

**கிறிஸ்மஸ் தாத்தா** என்பது யார்? **கிறிஸ்துவின் பிறப்பிற்கும்** இவருக்கும் என் தொடர்பு ? கிறிஸ்து இல்லாமல் கொண்டாடிவிடுவார்கள் ஆனால் **கிறிஸ்மஸ் தாத்தா** இல்லாவிட்டால் திண்டாடி விடுவார்கள். உலக வழிகளின் மாயையான தோற்றங்களை மனதில் புகுத்தி ஆவிக்குிறிய வாழ்கையிலோ இறந்துபோனவர்களாகவே நம் சபை கிறிஸ்தவர்கள் காணப்படுகிறார்கள். இயேசுவின் பிறந்த நாளை **சரீரத்தில்** கொண்டாடும் மக்கள்தான் இன்று அதிகம். **பிசாசின் தந்திரத்தை** நாம் அறிந்துகொள்ள வேண்டுமே. நிகழ்ச்சியில் அனைவரின் கவனத்தையும் **கிறிஸ்மஸ் தாத்தாவே** ஈர்த்துக்கொள்ளும்போது **இயேசுவுக்கு இடம்** எங்கே? **அப்போஸதலர்களோ** இயேசுவின் பிறந்த நாளை கொண்டாடியதாக வேதம் போதிக்கவிலலையே.

அப்படியே **கிஸ்துமஸ் தாத்தாவின்** வேடமும் **வேதத்தில் இல்லையே.** சந்ததி சந்ததியாய் சபையில் தொடர்வதுதானே என்பதற்காக **சத்துருவுக்கு** சாதகமாகிவிடலாமோ! எங்கள் **பாரம்பரியங்களினாலேயே** கிறிஸ்துவின் கட்டளைகளை அவமானமாக்குகிறீர்கள் என்றார் இயேசு. சில கிறிஸ்மஸ் நிகழ்ச்சிகளில் **தாத்தா** எப்போ வந்தீங்க, **பாட்டி** எப்படி இருக்காங்க போன்ற கிண்டலான கேள்விகள் கேட்கப்பட்டு கூட்டங்களை கூத்தாட செய்வதும் கிருஸ்தவர்களுக்கு பொருத்தமானதோ? ஜனங்களின் முகத்தை **மறைமுகமாக** கிஸ்துமஸ் தாத்தாவான தன்னை நோக்கிதிருப்புவதே சத்துருவின் நோக்கம். சாதகமாக ஒன்றை காட்டிவிட்டு **சத்தியத்தை** காணாதபடி கண்களை கட்டிபோடுவது **பிசாசின் தந்திரம்.** மேலும் உலகத்திறிகு ஒத்த வேஷத்தையும், உன்னுடைய வேஷந்தான் என்று ஒத்துக்கொள்ள செய்துவிடுவான். இதனையே இன்றைய நாட்களில் **கிறிஸ்மல் தாத்தா** வேடங்கள் வெளிப்படுத்துகின்றன்.

4ம் நூற்றாண்டில் துருக்கியில் **சிமிர்னாவில்** பேராயராக இருந்தவர் செயின்ட் நிகோலஸ். வெரும் செல்வந்தராகவும் ,அத்துடன் குழந்தைகளுக்கும், ஏழைகளுக்கும் உதவி செய்தவராகவும் இருந்ததால் ரோமன் கத்தோலிகக் அமைப்பினர் அவரை நினைவு கூறுவதை வழக்கப்படுத்தினார்கள். இங்கிலாந்து தேசத்தினர் அவரை (Father of Christmas) என்று அழைத்தனர். விளைவு, உலகத்தின் **இரட்சகராக** ஈவாகவும் **பரிசாகவும்** கொடுக்கப்பட்ட **இயேசுவின்**மேல் இருந்த கவணத்தை பரிசு கொடுக்கும் **கிறிஸ்மஸ் தாத்தாவின்** மீது திருப்பி விட்டனர். ஜனங்களின் விருப்பமும் **புத்தாடை, பரிசு. பலகாரம்** என்று மாறிப் போனது. **ஆத்துமாவுக்கான** பரிசைவிட, **சரீரத்துக்கான** பரிசுகளோ சிறப்பாக தெரிந்தது. ஜனங்களுக்கு. அவரது **இரக்க குணத்தை** ஆண்டு தோறும் நினைவுகூற தொடங்கி, எதிரியுடன் கலந்து கிடங்கிற்குள் கிறிஸ்துவர்கள் விழுந்துகிடப்பது பரிதாபமானது. புனிதர் என்ற பட்டத்துடன் அவரை (St. நிக்கோலஸ்சை) புகழ்பாட தொடங்கினார்கள். அவரையே, ஆராதனைக்குறியவராக மாற்றினதினால் அவரது **உருவம்** விக்கிரகமானது. **தியா** நாளின் கோவலில் பொம்மையின் மாதிரிகள் விற்கப்பட்டதுபோல (அப். 19:24) அவரை போன்ற **தோற்றமுடைய வேடம்** வியாபாரமாக மாறிப்போனது. ஜனங்களின் பார்வை வேறுபக்கமாக திரும்பிபோது பிசாசு உள்ளே நுழைவதும மக்களை வேறு வழியில் கூட்டிசெல்வதும் பிசாசுக்கு எளிதாகிபோனது.

கிறிஸ்து பிறப்பினை மறந்து (St. Nicholas Day) என்றே ஜனங்கள் கொண்டாடவும் தொடங்கினர். இது ஒரு புறம் இருக்க.

(தோர்) என்ற ஜெர்மானிய கடவுளை **கொம்புகள்** உள்ள **இரண்டு மான்கள்** ஆகாயத்தில் தேரில் இழுத்து செல்வதை போன்று உருவகப்படுத்தப்பட்ட ஜெமானிய **புரானங்கள்** கூறும் கதையே **கிறிஸ்மஸ் தாத்தா** என்ற வடிவிலும் **யூல்** என்ற ஜெர்மானியர்களின் பண்டிகை என்ற வடிவிலும கிறிஸ்மஸ் கிறிஸ்துவத்துடன் கலந்துவிட்டது கவலைக்குறியது! **மான் கொம்புகளை** வீட்டுசுவர்களில் அலங்காரமாக மாட்டிவைக்கும் வழக்கம் டோர் என்ற தெய்வத்தை வணங்கியவர்களால் தொடங்கப்பட்டதே. நீண்ட தாடி **தொப்பி** அங்கி. நிலாவை நோக்கி **ஆகாயத்தில்** மான்கள் பாய்ந்து செல்லும் காட்சியும் **பாபிலோனியர்கள்** வணங்கி வந்த **நிம்ரோத்தையும்** நிலவு தெய்வத்தையும் **தோர்** என்ற தெய்வத்தையும் மையப்படுத்தி வடிவமைக்கப்பட்டவைகளே. அத்துடன் பாபிலோனியர்களின் சூரிய **கடவுளின்** பிறந்த நாளாக கருதப்படும் **டிசம்பர் 25ம்** தேதியினையே **கிறிஸ்து பிறப்பின்** தினமாகவும் கொண்டாடும்படி கிறிஸ்தவம் பணிக்கப்பட்டது. எத்தனை பெரிதான கலப்படம்.

பிரியமானவர்களே! லாபானுடைய வீட்டைவிட்டு யாக்கோபு ஓடிப்போகிறப்போது லாபான் யாகோபை நோக்கி: என் தெய்வங்களை ஏன் திருடி கொண்டுக்போகிறாய் ? என்று கேட்டதைபோல **கிறிஸ்மஸ் தாத்தாவின்** வெவ்வேறு உருவங்களையும் படங்களையும் வைத்துதே கோள்வியை கேட்கும் காலம் தூரத்தில் இல்லை. **புற ஜாதிகளுடைய** மார்கத்தை கற்றுக்கொள்ளாதீர்கள்(எரே.10:2) ஆராதனைக்குறியவைகளில் அறியாமல் ஆராதிக்கிறவைகளை அகற்றிவிடுவோம். அப். 17:23. **தேவனுடைய** ஆலயத்துக்கும் **விக்கிரகங்களுக்கும்** சம்பந்தம் ஏது? (2 கொரி 6:16) வீனானவைகனை பின்பற்றினால் நம்மையும் அது வீணராகவே மாற்றிவிடும். (2 இராஜ 17:15) ஜாக்கிறதை.

## "இஸ்லாமியருக்கான நற்செய்தி"

மேற்கண்ட தலைப்பில் ஒரு புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. அதில் **இஸ்லாமியர்** கிறிஸ்துவ வேதத்தைப்பற்றி அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு வசன அடிப்படையிலும் குரானில் எழுதப்பட்ட சுறா அடிப்படையில் தெளிவான பதில் எழுதப்பட்டுள்ளது. இதை கிறிஸ்தவர்கள் வாங்கி படித்து விபரம் அறிந்திருப்பது நல்லது. இந்த புத்தகத்தை இஸ்லாமியருக்கு கொடுப்பதற்காக அல்ல. வாசகர்கள் அறிந்துவைத்து அவர்களுக்காக ஜெபிப்பதற்கு பயன்படும்.

இது **ஜெர்மனி தேசத்தில் அச்சடிக்கப்பட்டது.** தமிழ்நாட்டில் இந்த புத்தகத்தை வாங்கி பயன்பெற கீழே காணும் விலாசத்தில் தொடர்புக்கொள்ளலாம்.

**JEEVA OLI,**
**Post Box No. 551, I.C.Pettai, Tirunelvelli - 627 010**
email : jeevaoli@rediffmail.com
website : www.grace-and-truth.net

**(எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் (இயேசு) சித்தமுள்ளவராய் இருக்கிறார்.** 1 தீமோ 2:4).

# சூழ்நிலையில் நம் ஊழியத்தை கர்த்தர் கவனிக்கிறார்

நன்றி : சினேகிதன்

## தாமதம்

**நல்ல சமாரியன் :**

**தேவனின் உள்ளத்தைப் புரிந்துகொண்டால்,** தேவையுள்ள இடங்களைத் தெரிந்துகொள்வது எளிதானதாகும். வழியில் இருக்கும் அனைத்தையும் விட்டு விலகியே நாம் பயணிக்க விரும்பினால். அவரது விருப்பத்தை நிறைவேற்றும் **வாய்ப்பையும்** நாம் தவறவிட்டுவிடக்கூடும். பரிதாபமாகக் **குற்றுயிராய்** கிடப்போரை கண்டும், பாத சாரிகளாக அவர்களை கண்டுகொளளாமல் நாம் கடந்து செல்லும்போக்கு, அவ்வழியே கர்த்தர் நம்மை கொண்டுபோன நோக்கத்தை இழந்துவிடபண்ணும். **துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும் பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்** (சங். 1:1) என்று விலகிச் செல்லவேண்டிய கூட்டத்தை இனம் கண்டுகொள்ளும் நாம் அதே வேளையில் **"நடக்கவேண்டிய" "நிற்கவேண்டிய" "உட்காரவேண்டிய"** இடத்தையும் நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டியது மிக முக்கியமாகும் அது நாம் கற்றுக்கொள்ளவேண்டிய அடுத்த கட்ட பாடம் அகும்.

### தேவ மனிதனின் தாமதம்

சவுல் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டபோது "தேடிப்போன கழுதைகள் அகப்படும் என்றும், மூன்று மனுஷர்கள் சந்திப்பார்கள், தீர்க்கதரிசிகளின் கூட்டத்திற்கு எதிர்படுவாய், கர்த்தருடைய ஆவி உன்மேல் இறங்குவார்" என்று சாமுவேல் சொன்ன அடையாளங்கள் எல்லாம் **அன்றைய தினமே நிறைவேறியது**(1 சாமு 10:9) எனினும், சவுலின் வாழ்கையில் மற்றொரு சந்தர்ப்பத்தில் நீ எனக்கு முன்னே கில்காலுக்கு இறங்கிப்போ **சர்வாங்க தகன பலிகளையும்** சமாதான பலிகளையும் செலுத்தும்படிக்கு **நான் உன்னிடத்தில் வருவேன்.** நான் உன்னிடத்தில் வந்து நீ செய்யவேண்டியதை கர்த்தர் எனக்கு அறிவிக்கும் மட்டும் **ஏழுநாள் காத்திரு** (1 சாமு 10:8) என்று சாமுவேல் சொன்னது உடனே நடைபெறாமல் **ஒரு வருடத்திற்**கு பின்பு அது நடந்தது. (1 சாமு 13:1) இந்த **ஒரு வருடத்தி**ல் கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்படிவது சவுலிடம் காணாமல் போய்விட்டது. கில்காலுக்கு **சாமுவேல் வர தாமதமானபோது**, சர்வாங்க தகனபலியை சவுலே செலுத்திவிட்டான். (1 சாமு 13:9) **"குறித்த** நாட்களின் திட்டத்தின்படி **நீர் வராததினாலேயே** நான் இப்படிசெய்தேன்." என்று சவுல் நியாயப்படுத்தி சொன்னபோதிலும் அது கர்த்தரால் ஏற்றுக்கொள்ளபடவில்லை. (1 சாமு. 13:11- 13) .

பிரியமானவர்களே ! **தேவ மனிதர்களுக்காக காத்திருக்கவேண்டியது எத்தனை அவசியம். தேவையுள்ள மக்கள் மத்தியில ஊழியர்கள் வந்துகொண்டிருக்கும் அவர்களது கால சக்கரத்தில் தவிர்க்க கூடாத தாமதங்கள் சில சமயங்களில் ஏற்படலாம், இதனை நாம் புரிந்துகொண்டால், இருபுறமும் பெரிய இழப்புகளை தவிர்த்து விடலாம்.**

## அப்பாலேபோன ஆசாரியன் - அவசரமாக போன ஆசாரியன்

## தாமதம் என்ற தலைப்பில் ஆரம்பத்தில் வாசித்த விஷயத்து மறுபடியும் வருவோம்.

**எரிகோவுக்கு** போய்கொண்டிருந்த ஒரு மனிதன் **கள்ளர் கையில்** அகப்பட்டான், அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டு, அவனை காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுவிட்டு போனார்கள். குற்றுயிராக ஒரு மனிதன் கிடப்பதை **"தற்செயலாக"** பார்த்த **ஆசாரியன்,** அந்த மனிதனை தான் **கண்டபோதிலும்** பக்கமாக விலகிப்போனான். அப்படியே **லேவியனும்** அந்த இடத்துக்கு வந்து, **அவனைக்கண்டு** பக்கமாக விலகிப்போனான். (லூக். 10 : 30 - 32) என்று வாசிக்கிறோம்.

குறிப்பிட்ட ஒரு காரியத்தின் மீதோ, சமபிரத்தாயத்தின் மீதோ, அல்லது **பாரம்பரியத்தின்** மீதோ கவனத்தை நாம் குவித்திருக்கும்போது. தற்செயலாக **அதி முக்கியமான** சம்பவத்தை காண நேரிடுவதை பலர் கவணத்தில்கொள்வதில்லை. முன்னே நிற்கும் நம் சடங்குகளின் நோக்கமே நம் வேகத்தை முடிக்கிவிடுவதால், தற்செயலானவைகளை விட்டு **தப்பிபோகவே** நினைக்கின்றனர். **பிரதானமானவைகள் என்று நம்புகிறவற்றை** நோக்கிசென்று கொண்டிருக்கும் வேகத்தில், பசியானவர்களையும், வியாதியுள்ளவர்களையும், நெருக்கப் பட்டவர்களையும்,சிறையானவர்களையும்,துன்பத்திற்குள்ளவர்களையும். ஒடுக்குண்டோர்களையும். பரிதாபமாக அப்படியே விட்டுவிடுகின்றனர். ஆசாரியனும், லேவியனும் குறிப்பிட்ட நேரத்தில் ஆலய அராதனைக்கு தாங்கள்சேரவேண்டிய இடத்திற்குபோய் சேர்ந்திருப்பார்கள், தங்கள் பாரம்பரியத்தை பாதுகாத்திருப்பார்கள், **ஆனால், வழியில் கிடந்தவனையோ மரனத்துக்கு நேராக வழியனுப்பிவைத்தவர்களாகவேஅவர்களது பயனம் கர்த்தரின் பார்வையில் அவர்களை குறித்து எண்ணப்பட்டது காணப்பட்டது.**

**பசியாய் இருந்தேன்,** நீங்கள் எனக்கு போஜனம் கொடுக்கவில்லை, **தாகமாய் இருந்தேன்,** நீங்கள் என் தாகத்தை தீர்க்கவில்லை, **அன்னியனாய்** இருந்தேன், நீங்கள் என்னை சேர்த்துக்கொள்ளவில்லை. **வஸ்திரமில்லாதிருந்தேன்,** நீங்கள் எனக்கு வஸ்திரம் கொடுக்கவில்லை, **வியாதியுள்ளவனாவும்,** காவலில் அடைக்கப்பட்டவனாகவும் இருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லை என்பார் இயேசு. ஆண்டவரே, வஸ்திரமில்லாதவராகவும், தாகமுள்ளவராகவும், அன்னியராவும், பசியுள்ளவராகவும், வியாதிபட்டவராகவும், காவலில் அடைக்கப்பட்டவராகவும், **நாங்கள் எப்போழுது உம்மை கண்டோம்,** உமக்கு உதவி செய்யாதிருந்தோமா? (மத். 25:43-44). என்று கேட்டால், **அதற்கானவிடை நீங்கள் வந்த**

**வழியிலேயே இப்படிப்பட்டவர்களை கவணிக்காமல் இருந்திருப்பீர்கள்.** நம்முடைய நிலை என்ன ? **சில சமயம் "தற்செயலாக நடைபெறும் காரியங்கள் நம்மை தாமதப்படுத்தலாம் அவ்வளவே. எனினும், நமது பிரயாணத்தையோ அவைகள் தடுத்து நிறுத்தமுடியாது"**

**எத்தனையோ பேருடைய ஊழிய பயணங்களில் காயங்களில் திராட்சைரசம் வார்க்க வேண்டியிருப்பதினாலும் அவர்களை சத்திரத்தில்** (ஆலயத்தில்) **சேர்க்க வேண்டியிருப்பதினாலும், சத்திரகாரர்கள் இன்னும் அவர்களை கவனித்து சுகப்படுத்த வேண்டியதிருப்பதினாலுமே இயேசுவின் வருகை இன்னும் தாமதமாகிக்கொண்டே இருக்கின்றது.**

## இடையில் எழுந்து வந்த இயேசு - அவசரமாய் வந்த இயேசு

இயேசு ஜனங்களை அனுப்பி விடுகையில், தம்முடைய சீடர்கள் படவில் ஏறி அக்கரையில் பெத்சாயிதாவுக்கு எதிராக, தமக்கு முன்னே போகும்படி சீஷர்களை துரிதப்படுத்தினார், அவரோ **ஜெபம் பண்ணும்படி** ஒரு மலையின்மேல் ஏறினார். இயேசுவுக்கு அது ஜெபத்தின் தொடக்கவேலை எனினும், அதே சமயம் சீடர்களுக்கோ நடுக்கடலில் ஆபத்தான சூழ்நிலை ஏற்பட்டது. சீடர்களின் கண்ணுக்கு இயேசு மறைந்துவிட்டார் எனினும் இயேசுவின் கண்கள் **சீடர்களை பாரத்துக்கொண்டே** இருந்தனவே. **"தண்டு வலிக்கிறதில் வருத்தப்படுகிறதை அவர் கண்டு"** என்றல்வோ வாசிக்கிறோம். நம்முடைய கண்களுக்கு அவர் தொலைவில் உள்ளவர்போல தென்பட்டாலும், அவரது **கண்பார்வைக்குள்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்** என்பதுதான் **நற்செய்தி.** "கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது." எனவே இந்த விஷயத்தில் நாம் மதியில்லாதவர்களாக இருந்துவிடக்கூடாது. (2 நாளா 16:9) அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. (எபி. 4:13). "உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய் தங்கினாலும், **அங்கேயும் உமது கை என்னை நடத்தும்** (சங். 139:7,9.10) என்பதுதானே சங்கீதகாரனின் நிரூபனம். " அவர் சமீபத்திற்கு மாத்திரமா தேவன், தூரத்திற்கும் தேவன்".(எரே 23:23).

ஒரு முறை. சீடர்கள் "இயேசுவோடு படகிலே பயணித்துகொண்டிருந்தபோது இயேசு நித்திரையாய் இருந்தநேரத்தில், அலையும் பெருங்காற்றும் உண்டானது, ஆண்டவரே, எங்களை இரட்சியும், மடிந்துபோகிறோம் என்று கதறியபோது(மத். 8:25) இயேசு அந்த ஆபத்தான சூழ்நிலையை அமைதலாக்கினார். இப்போதோ, இயேசுவை தூரத்தில் விட்டுவிட்டு வந்து விட்டோமே, என்று சீடர்கள் நினைத்திருக்கலாம்.(மத். 14:22.23). அந்த வேளையிலும் **ஜெபிக்கும்படியாக சென்ற இயேசு ஜெபிக்காமல் துரிதமாக அவர்களிடம் வந்து சேர்ந்தாரே.** அந்த சூழ்நிலையில் இயேசு அவசரமாக **கடலில் நடந்து வந்தவருக்கு காரணமும் உண்டு.** " சீடர்கள் ஏறின ஒரேஒரு படகு தவிர, அங்கு **வேறெரு படகு இல்லை"** ( யோவான் 6:22). நமக்குத்தான் **படகு தேவை, அவருக்கோ பாதமே** போதும். மேலும் உதவிசெய்யும்படி வருகிறவரை கண்டு புரிந்துகொள்ளாமல் **ஆவேசம் என்று சீடர்கள் அலறினதே. அவர் கடந்து போகிறவர்போல் காணப்பட்டதற்கு காரணம்** ( மாற் 6:45-48).

ஊழியர்களை ஜனங்கள் தேடிவரும்போது. " ஊழியர் **ஜெபித்துக்கொண்டிருக்கின்றார்** எனவே இப்போது பார்க்கமுடியாது" என்று உதவியாளரோ துணைவியாரோ, பிள்ளைகளோ, அலுவலகத்தில் உள்ளவர்களோ **பதில் சொல்வது சரியா?** என்று சிந்தித்துப்பார்த்தால் **குற்றுயிராய் இருப்பவர்களுக்கே "முதல் உதவி"** என்பது தெளிவாகவே தெரியவரும். **ஆண்டவருக்குரியவைகளை மாத்திரமே கணக்கில் காட்டி அடுத்தவரை கண்களிலிருந்து கழித்துவிடாதபடி கவனமாய் இருப்போம்.**

## ஊருக்குள்ளே - ஊருக்கு வெளியே- வழியிலே வரும் ஊர்

இயேசு **நாயீன்** என்ற ஊரின் வாசலுக்கு சமீபித்தபோது, மரித்துபோன ஒருவனை அடக்கம் பண்ணும்படி கொண்டுவந்தார்கள். கைம்பெண்ணாயிருந்த அவனது தாய் அழுதுக் கொண்டிருந்தாள். **செத்துப்போனவர்களின் பாடை ஊர் வெளியே வந்து கொண்டிருக்கும்போது, இயேசு ஊருக்குள்ளே நுழைந்துகொண்டிருக்கின்றார்.** இது தற்செயலாக நடந்தது என்று சிலர் கூறினாலும், இயேசு அந்த பெண்ணை பார்த்து அவள் மேல் மனதுருகி - அவளை நோக்கி அழாதே என்று சொல்லி, **கிட்ட வந்து** பாடையை தொட்டார். அதை சுமந்தவர்கள் நின்றார்கள், அப்போது அவர், வாலிபனே எழுந்திரு என்று உனக்கு சொல்லுகிறேன் என்றார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து பேச தொடங்கினான். அவனை அவன் தாயிடத்தில் இயேசு ஒப்புவித்தார். எல்லாரும் பயம் அடைந்து. மகா தீர்க்கதரிசியானவர் நமக்குள்ளே தோன்றியிருக்கிறார் என்றும் தேவன் நமது ஜனங்களை சந்தித்தார் என்று சொல்லி, **தேவனை மகிமைப்படுத்தினார்கள்.** (லூக். 7:12-16). அழுதுகொண்டிருந்தவர்கள் ஆனந்தமடைந்துவிட்டார்கள்.

பிரியமானவர்களே, **துக்கத்தோடு இருக்கும் ஒரு குடும்பத்தை வழியில் கண்டும் அவர்களை கண்டுகொள்ளாமல் ஊருக்குள் சென்றிருந்தால அந்த ஊர் உங்களுக்கு காலியாகவே இருக்கும்.** ஊரே வெளியே போய்விட்டபின்னர், யாருக்கு பிரசங்கிப்பது? நிற்கவேண்டிய இடத்தில் நின்றால், அதனையே **பிரசங்க பீடமாக** மாற்றிவிடலாம்.

## ஊருக்கு வெளியே, ஊரோ உள்ளே, வழியிலே விழியில்லாதவன்

இயேசுவும் அவருடைய சீடர்களும் எரிகோவுக்கு வந்து அங்கிருந்து புறப்படுகிறபோது அவரால் **சுகம் பெற்றிருக்க வேண்டிய** ஒரு மனிதன், விட்டுவிடப்பட இருந்தான். தீமேயுவின் மகனாகிய **பர்திமேயு என்கிறவன் வழி அருகே உட்கார்ந்து. பிச்சை கேட்டுக்கொண்டிருந்த குருடனான அவன்** (மாற். 10:46) "இயேசுவே. தாவீதின் குமாரனே. **எனக்கு இறங்கும்"** என்று கூப்பிட்டபோது, அனேகர் "அவனை அதட்டினார்கள்" (மாற் 10:48) எனினும். **"இயேசு நின்றார்"** (மாற். 10:49). ஒருவேளை அவன்இயேசு கிறிஸ்துவால் பார்க்காமல் தவிர்க்கப்பட்டிருப்பான் என்றால் இயேசுவைபற்றி அவனது மனதில் பெரிய குறை உண்டாகியிருக்கும், தான் இயேசுவால் கண்டுகொள்ளப்படவில்லையே என்று கண்ணீர் சொரிந்திருப்பான். **ஊருக்கு உள்ளே நாயீனூர் விதவையின் மகன் குழியை நோக்கி போய் கொண்டிருக்கும்பொது இயேசு அவனை பாடையில் கண்டு உயிரோடு எழுப்பி அவன் தாயிடம் ஒப்படைத்தது போல இங்கு எரிகோ**

**ஊரைவிட்டு வெளியே புறப்படும்போதும் கண் பார்வை அற்ற அவனை குறையுள்ள, தன்னை நோக்கிவேண்டிகொள்ளுகிற ஒரு மனிதனையும் இயேசு விட்டுவிடாமல் தொட்டுவிட்டு செல்வது இயேசுவின் அற்புதமானதோர் குணமல்லவோ !.** விளைவு என்ன? இயேசுவுடன் சென்றுக்கொண்டிருந்த அந்த கூட்டத்தில் பார்வையடைந்த **அந்த மனிதனும்** ஊழியத்தில் பங்குபெற்றுவிட்டானே. இயேசுவை அறிவிக்க அந்த குருடனின் சாட்சி அந்த ஊழியத்தில் மிக முக்கியமல்லவா !

**சிறு பிள்ளைகளின் மேல் அவர் கைகளை வைக்கும் படிக்கு கொண்டுவந்தபோது** சீடர்கள் அதட்டினார்கள், எனினும், இயேசுவோ சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள் அவர்களை தடை பண்ணாதீர்கள் என்றாரே.

## வாசலிலேயே வேலியாகிப்போன லேகியோன் - வழியனுப்பிய வரவேற்பாளன்

கதரேனருடைய நாட்டிற்கு சீஷருடன் இயேசு படகிலிருந்து கறையில் இறங்கினபோது நெடுநாளாய் **பிசாசுகள்** பிடித்தவனும். **வஸ்திரந்தரியாதவனும்**, வீட்டில் தங்காமல் பிரேத கல்லறைகளிலே தங்குகிறவனுமாயிருந்த **அந்த பட்டனத்து மனுஷன்** ஒருவன் அவருக்கு எதிராக வந்தான். அவன் இயேசுவை கண்டபோது கூக்குரலிட்டு அவருக்கு முன்பாக விழுந்து இயேசுவே உன்னாதமான தேவனுடைய குமாரனே எனக்கும் உமக்கும் என்ன? என்னை வேதனைப்படுத்தாதபடிக்கு உம்மை வேண்டிக்கொள்கிறேன் என்று மகா சப்தத்தோடே சென்னான். (லூக் 8:27, 28) "அந்த அசுத்த ஆவி அவனைவிட்டு போகும்படி **இயேசு கட்டளையிட்டபடியினாலே அப்படி சொன்னான்"** (லூா 8:29) என்றே வேதத்திலே வாசிக்கின்றோம். **இயேசு எப்போது அந்த பிசாசுக்கு கட்டளையிட்டார்? குறித்து வசனத்தில் காணப்படவில்லையே ! ஆனால் அந்த "லேகியோன்" பேசுவதற்கு முன்னமே இயேசு அவனிடம் பேசியிருந்தார்** என்பதை வசனம் தெளிவாக சுட்டிக்காட்டுகின்றதே!

பிசாசுகள் அந்த மனிதனைவிட்டு நீங்கி, பன்றிகளுக்குள் புகுந்து பன்றி கூட்டம் முழுவதும் உயர்ந்த மேட்டிலிருந்து கடலிலே பாய்ந்து அமிழ்ந்து மாண்டது. அவைகளை மேய்தவர்கள் சம்பவித்ததை கண்டு, ஓடிப்போய் பட்டிணத்திலும் சுற்றுப்புறங்களிலும் அறிவித்தார்கள். (லூக் 8:33,34) **அற்புதம் அறிவிக்கப்பட்டது எனினும் அவரோ துரத்தப்பட்டுவிட்டார்.** கதரேனருடைய சுற்றுப்புறத்தில் உள்ள திரளான ஜனங்கள் எல்லாரும் மிகவும் பயம் அடைந்த படியினாலே, **தங்களைவிட்டு போகும்படி அவரை வேண்டிக்கொண்டார்கள். அந்தபடி அவர் படவில் ஏறி திரும்பிபோனார்.** (லூக் 8:37)

தற்செயலாக நடைபெற்ற இந்த நிகழ்வினால் ஒரு மனிதனுக்கு கிடைத்த சுகத்தினால், விடுதலையினால் ஊருக்குள் நுழையும் வாய்ப்பினை இழந்தார் இயேசு. **அவர் திரும்பி போகவேண்டிய நிலை உண்டானதினால் ஏற்பட்ட விளைவு என்ன? பிசாசுகள்நீங்கின, அந்த மனுஷன் சுகமடைந்து இயேசுவுடன் கூட ஊழியத்திலியிருக்கும்படி உத்திரவு கேட்டபோது, இயேசு அவனை நோக்கி, நீ உன் வீட்டுக்கு திரும்பிப்போய் தேவன்உனக்கு செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவி என்று சொல்லி அவனை அனுப்பி விட்டார்.** அந்தபடி அவன் போய் **இயேசு தனக்கு செய்தவைகளையெல்லாம்** பட்டணத்தில்

எங்கும் பிரசித்தப்படுத்தினார். (லூா. 8:28,39) அவன் கேட்டுக்கொண்டபடிஅவனையும் தன்னுடன் கூட அழைத்து வந்திருப்பார் என்றால் அற்புதத்தை அறிவிக்கிறதற்கு அங்கு யாரும் இல்லாதிருக்குமே: தான் திரும்ப அந்த ஊருக்கே நிலை உண்டானதினால் அவனை ஊருக்குள் திருப்பி அனுப்பினார் இயேசு. தற்செயலாக நடந்த நிகழ்வுதான் இது, ஊருக்குள் நுழைய முடியாதபடி இயேசுவை வந்த வழியில் திரும்பி அனுப்பிவிட்டது. அந்த மனிதனை கண்டுகொள்ளாமல், **விடுதலை ஆக்காமல்** இருந்திருந்தால் ஊருக்கு சென்றிருக்ககூடிய வாய்ப்பு இயேசுவுக்கு கிடைத்திருக்கும். எனினும் அது அவருக்கு **இழப்பு** அல்ல என்பதை, **"இயேசு அதே ஊருக்கு திரும்பி வந்தபோது ஜனங்கள் எல்லோரும் அவருக்காக காத்திருந்தபடியால்** அவரை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார்கள்" (லூக் 8:40) என்ற நிகழ்வு சுட்டிகாட்டுகின்றதே,எத்தனை பெரிய மாற்றம் இது. இதற்கு காரணம் தற்செயலான அந்த நிகழ்வுதானே! அது அவர் வேலையை எளிதாகிற்றே!.

## சாலையில் நடைபெற்ற சந்திப்பு - தாமதம் தந்த லாபம்:

யுதேயாவை விட்டு இயேசு கலிலேயாவுக்கு போய்கொண்டிருக்கும் பயணத்தின்போது அவர் சமாரியா நாட்டின் வழியாய் போக வேண்டியதாய் இருந்தபடியால், வழியில் யாக்கோபு தன் குமாரனாகிய யோசேப்புக்கு கொடுத்த நிலத்துக்கு அருகே இருந்த, சமாரியாவிலுள்ள சிகார் எனப்பட்ட ஊருக்கு வந்தார். (யோவான். 4:2. 4,5). இயேசு பிரயானத்தினால் **இளைப்படைந்தராய்** அந்தக் கிணற்றருகே **உட்கார்ந்திருந்தார்: அப்போது ஏறக்குறைய 6ம் மணி வேளையாய் இருந்தது. அவருடைய சீஷர்கள் போஜன பதர்த்தங்களை கொள்ளும்படி** ஊருக்குள்ளே போய் இருந்தார்கள் (யோவா. 4:6,7) ஐந்து அப்பத்தையும் இரண்டு மீனையும் கொண்டு ஐயாயிரம் பேரை போஷிக்கவும் தண்ணீரை திரட்சை ரசமாக மாற்றவும் வல்லமையுடையவர் அவர்: ஐயாயிரம்பேரை போஷக்கும்படியாக சீஷர்களை அவசரபடுத்தியவர், **தன்னுடைய பசியின்போதே காத்திருப்பதை தெரிந்துகொண்டதினால் பயனத்தின்போது உண்டான தாமதத்தில், ஒரு ஸ்திரி சந்திக்கப்பட்டுவிட்டாளே!** சோதனையின் போது, வனாந்திரத்தில் 40 நாள் சோதனையின் போது பசியாயிருந்தவேளையிலும் **பிசாசின் சத்தத்திற்கு** செவிக்கொடுக்காதவர் அவர். **அடுத்தவரது வாழ்விற்கு அவசரம், தனது வாழ்விற்கோ தாமதம்: இதுவே இரட்சகரின் வாழ்க்கை சூத்திரம்.**

தண்ணீர் மொள்ள வந்த ஸ்திரியை நோக்கி "தாகத்திற்கு தா" என்று பேச தொடங்கி தான் யார் என்பதை அவளுக்கு அறிமுகம் செய்துவைத்துவிட்டாரே. **மேசியா** வருகிறார் என்ற அறிவு அவளுக்கு ஏற்கனவே இருந்த போதிலும். **வேசியை**போலவே வாழ்ந்துகொண்டிருந்த அவர், தன் குடத்தை வைத்துவிட்டு, ஊருக்குள்ளேபோய் ஜனங்களை நோக்கி: நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்கு சொன்னார் அவரை வந்து பாருங்கள் அவர் கிறிஸ்துதானோ என்றாள். (யோ. 4:24-29). **தற்செயலாக நடைபெற்ற சந்திப்பினால், தான் உட்கார்ந்திருந்த இடத்திற்கே அந்த ஊரையே வர செய்துவிட்டாரே இயேசு !** எத்தனை அற்புமானதோர் காட்சி இது. மேலும் சமாரியர் அவர் இடத்தில் வந்து **தங்களிடத்தில் தங்கவேண்டும்** என்று அவரை வேண்டிக்கொண்டார்கள்: அவர்களது வேண்டுதலுக்கு இணங்கி, அவர் **இரண்டு நாள் அங்கே தங்கினார்** (யோவான். 4:40) அதுபோலவே **லாசரு**

வியாதியாய் இருக்கிறான் என்பதை கேள்வியுற்றபோது, அவனைபோய் பார்க்காமல் பின்னும் இரண்டு நாள்இயேசு தங்கினார் என்று வாசிக்கிறோம். (யோவான் 11:6)ஒரு இடத்தில் அவர்கள் வேண்டுதலின்படி இரண்டு நாட்கள் தங்கினார். அதே சமயம் தன் நண்பன் அழைத்தபோது அவனிடம் செல்லாமல் மேலும் இரண்டு நாட்கள் தான் தங்கின இடத்திலேயே தங்கினார். எத்தனை பெரிய வித்தியாசம். **தேவையுள்ளவர்கள் நெருக்கிகொண்டிருந்தபோது தனது வேகத்தினால் அவர்களை இயேசு கடந்து சென்றுவிடவில்லை.**

ஜெப ஆலய தலைவனாகிய யவீரு, மரண அவஸ்தையாய் இருந்த தன்னுடைய குமார்த்தியை குணப்படுத்த இயேசுவை அழைத்துசென்றபோதும், திரளான மக்கள் அவரை நெருக்கினார்கள். அப்போது அந்த கூட்டத்தில் பனிரெண்டு வருஷமாய் **பெரும்பாடு வியாதி உள்ளவளாய்** இருந்த ஸ்திரி சொஸ்தமானாள் அதே சமயம் அவர் பேசிக்கொண்டிருக்கையில் எவ்வீருவின் குமார்த்தி **மரித்துபோன செய்தி** வந்துவிட்டது எனினும் வழியில் உள்ளோரை இயேசு வீசிவிடவில்லையே! அதுபோல மரித்துபோன அந்த பெண்ணையும் அவளை நேரில் கானாமலே சுகமாக்கிவிட்டாரே!

## வழிகாட்டிய விரோதி - வழியில் விடப்பட்டவனும்..

**பெலிஸ்தர் இஸ்ரவேலின்மேல் யுத்தம் பண்ண** தங்கள் சேனைகளை போருக்கு கூட்டியனார்கள். அப்போது ஆகிஸ் தாவீதை நோக்கி நீயும் உன் மனுஷரும் என்னோடே கூட யுத்தத்திற்கு வர வேண்டும என்று அறிய கடவாய் என்றான் (1 சாமு. 28:1) "உம்முடைய அடியான் செய்யபோகிறதை நீர் நிச்சயமாக அறிந்துகொள்வீர்" என்று தாவீதும் அதற்கு சம்மதித்திருந்தான் (1 சாமு. 28:2). தாவீதும் அவன் மனுஷரும் ஆகிஸோடே பின் தண்டிலே போனார்கள்.( 1 சாமு. 29:2) " யாதொரு குற்றமும் குறைவும் காணப்படவில்லை" ( தானி. 6:4) என்று தானியேலை குறித்து சொல்லப்பட்டதை போலவும் தாவீது குறித்தும் ஒரு குற்றத்தையும் கானேன். ( யோவான் 18:38) என்று **இயேசுவைகுறித்து** சொல்லப்பட்டதை பேலவுமே ஒரு குற்றமும் நான் இவனில் கண்டுபிடிக்கவில்லை.(1 சாமு. 29:3) என்று சொல்லப்பட்டது என்ற போதிலும். பெலித்தஸ்தரின் பிரபுக்கள் அவனமேல் கடுங் கோபமாகி அவனை பார்த்து அந்த மனுஷனை (தாவீதை) நீர் குறித்த தன் இடத்திற்கு திரும்பி போகும்படிக்கு அங்கே அவனை (தாவீதை) மறுபடியும் அனுப்பிவிடும்: யுத்தத்தில் இவன் நமக்கு சத்துருவாய் இராதபடிக்கு இவன் நம்மோடே கூட யுத்தத்திற்கு வரவேண்டியதில்லை. இவன் எதினாலே தன் ஆண்டவனோடே ஒப்புறவு ஆவான்? இந்த மனுஷனுடைய தலைகளினால் அல்லவா? சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று இந்த தாவீதை குறித்து அல்லவோ ஆடிப்பாடி சொன்னார்கள். (1சாமு29:4,5) என்று சொன்னபோது ஆகிஸ் தாவீதை அழைத்து நீ உத்தமன் என்றும் நீ பாளையத்தில் என்னோடே போக்கும் வரத்துமாய் இருக்கிறது என் பார்வைக்கு நல்லது என்றும் கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்:

நீ என்னிடத்தில் **வந்து சேர்ந்த நாள் முதல் இன்றைய வரைக்கும்** நான் உன்னில் ஒரு பொல்லாப்பும் காணவில்லை. ஆகிலும் பிரபுக்களின் பார்வைக்கு நீ பிரியமானவன் அல்ல. (1 சாமு. 29 :6) **திரும்பி போய்விடு என்று வழியிலேயே தாவீதை திருப்பி அனுப்பிவிட்டான்.**

தன்னுடைய இஸ்ரவேல் மக்களையே உன் ஆண்டவனுடைய (ஆகிஸ்) சத்துருக்கள் என்று தாவீது கூறுவதும், நீ தேவனுடைய தூதனை போல என் பார்வைக்கு பிரியமானவன் (1 சாமு. 29:8,9) என்று ஆகிஸ் தாவீதை பார்த்து கூறுவதும் ஆச்சரியமானது. யுத்தத்திற்கு சென்ற தாவீது பெலிஸ்தரின் தேசத்திற்கு திரும்பினான் தாவீதும் அவன் மனுஷரும் மூன்றாம் நாளிலே. சில்லாகுக்கு வந்து சேருகிறதற்குள்ளே. அமலேக்கியர் தென் புறத்து சீமையின்மேலும் சில்லாக்கின்மேலும் விழுந்து சில்லாகை கொள்ளையடித்து அதை அக்கினியால் சுட்டெரித்து அதிலிருந்த ஸ்திரிகளாகிய சிறியவர்களையும். பெரியவர்களையும் சிறைபிடித்து அவர்களை பிடித்துக்கொண்டு தங்கள் வழியே போய்விட்டார்கள்.(1 சாமு. 30:1,2) **இஸ்ரவேலைரை எதிர்த்து பெலிஸ்தியருடன் சென்றான் தாவீது, ஆனால் இங்கோ தாவீதின் குடும்பமே பரிபோய்விட்டது.** சவுல் தாவீதை தேடிய போது பெலிஸ்தியர்கள் சவுலுக்கு எதிராக வந்ததை போல, தாவீது இஸ்ரவேலை எதிர்த்து பெலிஸ்தியருடன் சென்ற போது அமலேக்கியர் **தாவீதின் மீது** வந்துவிட்டார்கள். பட்டணம் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டது. மனைவிகளும், குமாரரும். குமார்த்திகளும் சிறை பிடித்துக்கொண்டு போகப்பட்டார்கள் தாவீதின் இரண்டு மனைவி களாகிய அகினோவாமும், அபிகாயிலும் சிறைபிடித்துகொண்டுபோகப்பட்டார்கள். பெலிஸ்தியரோடுகூட இஸ்ரவேலரை எதிர்த்து சென்றதால் வீடே கொள்ளையாயிற்று. **தாவீது வழியிலேயே திருப்பி அனுப்பப்பட்டது, குடும்பத்தினை பாதுகாப்பதற்காகவே. ஆனால் தாவீதின் குடும்பம் நாசமானது. நமக்கும் இப்படிப்பட்ட நிலை உண்டாகும் என்றால், அதனை புரிந்துகொள்ளவேண்டும்.** தாவீது கர்த்தரை நோக்கி, நான் அந்த தண்டை பின்தொடர வேண்டுமா? அதை பிடிப்பேனா என்ற கேட்டபோது, அதை பின்தொடர்: அதை நீ பிடித்து, சகலத்தையும் திருப்பிகொள்வாய் என்றார் கர்த்தர் (1 சாமு 30:8) தாவீது பின்தொடர்நது சென்ற போது, **சத்தருவான ஒரு எகிப்தியனை வெளியில் அவர்கள் கண்டு,** அவனை தாவீதினிடத்தில் கொண்டுவந்தார்கள், தாவீது அவனுக்கு அப்பமும் குடிக்க தண்ணீரும் கொடுத்து, அத்திப்பழ அடையின் ஒரு துண்டையும், வற்றலான இரண்டு திராட்சை பழ குலைகளையும் அவனுக்கு கொடுத்தார்னர்: அதை அவன் சாப்பிட்டபின்பு, **அவனுடைய உயிர் திரும்ப அவனுக்குள் வந்தது.** அவன் இராப்பகல் மூன்று நாளாய் அப்பம் சாப்பிடாமலும் தண்ணீர் குடியாமலும் இருந்தான். (1 சாமு 30:18,19) **என் சத்துரு** பசியாயிருந்தால், அவனுக்கு **புசிக்க ஆகாரம்** கொடு. அவன் **தாகமாயிருந்தால்** குடிக்க தண்ணீர் கொடு (நீதி 25:21) என்ற வசனத்தினால் தாவீது வெற்றியை தன்வசப்படுத்திக்கொண்டான். **மனைவி மற்றும் பிள்ளைகளை காப்பாற்றபோகிற வேகத்தில், வழியில் கிடந்த அந்த மனிதனை கண்டுகொள்ளாமல் சென்றிருந்தால், வழிதெரியாமல் தாவீது நின்றிருப்பானே?** உன் மாமிசமானவனுக்கு உன்னை ஒளிக்காமல் இருக்கிறதல்லவோ உகந்த உபவாசம். (ஏசா. 58:6,7) ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கும் அனுபவம் இதுவே.

**பிரியமானவர்களே!:** எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் மக்களை நாம் ஏமாற்றிவிடக்கூடாது. அவர்களை நாம் **கண்டும் அவர்களை கடந்துசென்றுவிடக்கூடாது. சிந்துகிற துணிக்கைகளுக்காகவும்** (மாற். 7:28), **மேஜையிலிருந்து விழும் துணிக்கை களுக்காகவும்,** வழியிலும் வாசலிலும் காத்திருக்கும் ஜனங்களுக்கு பகிர்ந்துகொடுப்பதும், கிறிஸ்துவின் அன்பினை பகிர்ந்துகொள்வதும் நம்மிடத்தில் விடப்பட்டுள்ள மாபெரும் பணி. எந்த அளவினால் அளக்கிறோதோ,அந்த அளவினாலேயே திருப்பி அளக்கப்படுவோம்.(லூக் 6: 38)

# கேள்வி – பதில்

# ஜாமக்காரனின் பதில்கள்

## பரலோகம்:

**கேள்வி :** பரலோகத்தில் யாரும் **சாப்பிடுவதில்லை.** அங்கு **பசியும்** இல்லை என்று நீங்கள் ஜாமக்காரனில் எழுதியதற்கு சிலர் பேஸ்புக்கில் வெளி 2:7ல் **ஜீவ விருட்சத்தின்** கனியை புசிக்க கொடுப்பேன் என்று எழுதியுள்ளதை சுட்டிக்காட்டி டாக்டர் எழுதுவதை நம்பாதீர்கள் என்று சிலர் எழுதியுள்ளார்கள்.

**பதில் :** நான் எழுதுவதையோ பேசுவதையோ **வசனத்தோடு ஒப்பிட்டு பார்த்து** நம்புங்கள். எனக்கு **பேஸ் புக்கும்** இல்லை. மொபைலும் எனக்கு இல்லை. ஆனால் அப்படி எழுதியவர்கள் வேத வசனத்தை சரியாக அறியாதவர்களாகத்தான் இருக்கும். நீங்கள் குறிப்பிட்ட வசனத்தை மறுபடியும் வாசித்து பாருங்கள். வெளி 2:7ல் **பரதீசியில்** என்றுதான் எழுதப்பட்டுள்ளது. **பரலோகத்தில்** என்று எழுதப்படவில்லை. இந்த இரண்டுக்கு வித்தியாசம் தெரியாதவர்கள் பேசுகிறதையோ எழுதுகிறதையோ பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டாம். அவர்களின் வேத அறிவு அவ்வளவுதான் ஆகவே நீங்கள் வேத வசனத்தின்படி ஜாக்கிறதையாக வாழுங்கள்.

**கேள்வி :** திருச்சியிலுள்ள AG சபை பாஸ்டர் தன் சபையின் நிலத்தை விற்பதாக கூறி 7கோடி மோசடி எனறும் பாஸ்டர் முதல் 5 பேர் மீது வழக்கு என்று தினசரி செய்தி தாளில் 2016 ஆகஸ்ட் 27ல் வாசித்தோமே . நீங்கள் எழுதியபடி AG சபையில் நிறைய பிரச்சனைகள் காணப்படுகிறதே ?

**பதில் :** நான் ஜாமக்கபாரனில் எழுதியது சபையில் **அன்னிய பாஷையை** அடிப்படை உபதேசமாக வைத்தது. AOG சபை உபதேசம் வசனத்தின்படி தவறு என்று எழுதினேன். மேலும் சிலரின் ஊழல் சம்பவங்களை குறித்தும் எழுதினேன். அவ்வளவே !

ஒரு பெரிய ஸ்தாபனத்தில் அதிகம் சபைகள் உள்ள பிரபலமான சபைகளில் அங்கொன்றும் இங்கொன்றுமான பிரச்சனைகள் உண்டாகும் அதை தவிர்க்கமுடியாது.

நீங்கள் குறிப்பிட்ட திருச்சி AG சபையின் தலைமை பாஸ்டர் நாரிமன் பாஸ்கர் என்பவர் ஊழல் ஏதும்செய்தார் . என்று திருச்சி சபையிலிருந்து எனக்கு தகவல் இல்லை. திருச்சி சபை இடம் போததால் வேறு ஒரு இடத்தில் பல கோடி ரூபாய்களில் சபை கட்ட ஏற்பாடு செய்ததாக

கேள்விபட்டேன் அதற்காக பாஸ்டர் நாரிமண் அவர்கள் இப்போதுள்ள சபைக்கு அருகாமையில் உள்ள AOG சபையின் சொந்த நிலம் ஒன்றை விற்க முயன்றார். அட்வான்ஸ் தொகையும் கொடுக்கப்பட்டதாக கேள்விபட்டேன். ஆனால் ஒரு சபையின் சபையின் தலைமையின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் ஒரு சபை தன் நிலத்தை விற்க வேண்டுமானால் தமைமை நிர்வாகத்தின் ஒப்புதல்பெற வேண்டும். சபை பெயரில் உள்ள நிலத்தை இந்த பாஸ்டர் நிர்வாகக்குழு ஒப்புதல் இல்லாமல் விற்க முயன்றார். சட்டப்படி அது செல்லாது. இந்த சட்ட விதிகளை பாஸ்டர் அறியவில்லையோ? என்னவோ தெரியவில்லை. நிலத்தை வாங்க முயன்றவர்கள் பாஸ்டர் உண்மையை மறைத்து எங்களை ஏமாற்றிவிட்டார் என்றும் சபை மக்களையும் ஏமாற்றிவிட்டார் என்றும் புரளியை கிளப்பி விட்டார்கள். இதில் பாஸ்டரை பிடிக்காத அவர் சபை விசுவாசிகளில் சிலருதான் பிரச்சனையை மிகைபடுத்திவிட்டனர் என்பதாகத்தான் எனக்கு செய்தி வந்தது.

**கேள்வி :** சகோ சேவியர் (சென்னை( ஜாமக்காரனில் எழுதும் அன்னிய பாஷை கருத்துக்கள் வேதத்துக்கு விரோதமானவை என்ற எழுதியுள்ளாரே ?

**பதில் :-** அவர் வழக்கமாக அப்படித்தான் எழுதுவார். அவர் பேசும் அன்னிய பாஷையே உளரல்தான் அதிலேயே இவர்கள் ஊறிவிட்டார்கள். அவர்களால் அதிலிருந்து வெளிவரவே முடியாது. அவர்கள் நல்ல வேத அறிவுள்ளவர்களானால் தான்பழகிய அன்னிய பாஷையை அவரவர்களையே கேட்க வைத்து உதவினால் அவர்களுக்கே தாங்கள் பேசுவது **தேவனோடும்** அல்ல, **மனிதனோடும்** அல்ல வெறும் உளரல் என்பது விளங்கும். நீங்கள் நான் எழுதியதையும் .அவர் எழுதியதையும் ஒப்பிட்டு ஆராய்ந்துபார்த்து உங்களை சரிப்படுத்திக்கொள்ளுங்கள். அவரை விட்டுவிடுங்கள் அவர் பேசிக்கொண்டே இருக்கட்டும்.

**கேள்வி :** TV ல்( கார் வியாபாரியான) சகோ ஸ்டீபன் அவர்கள் பிரசங்கம் செய்யும் போது காரணமில்லாமல் அழுகிறாரே. அழுகை எப்படி வருகிறது?

**பதில் :** அது சகோ. தினகரிடமிருந்து கற்றுக்கொண்டது. அது உண்மையான அழுகை இல்லை. ஜனகளை அழ வைப்பதற்காக அழுவதை போன்ற அவர்களின் நடிப்பு. இப்போதெல்லாம் பல ஊழியர்கள் நடிகர் திலகமாக நடித்து மக்களை **அழவைத்து** வீடியோ எடுக்கிறார்கள். இவர்களையும் மக்கள் நம்புகிறார்களே!

## வாசகர் கடிதம்:

BYM R.STANLY அவர்கள் பரிட்சை சமயத்தில் பேசிய அன்னிய பாஷை குறித்து நீங்கள் எழுதியதை வாசித்து வருந்துகிறேன். எத்தனை ஆழமான வேத பண்டிதர் அவர். அவர் எழுதிய **நாளோரு மேனி** என்ற தியான மலர் இளம்பங்காளர்களுக்கு பெரிய ஆசீர்வாதமாக அமைந்துள்ளது. ஆதில் உள்ள ஒவ்வொரு நாள் செய்தியும் அப்படியே சபையில் திறந்து வைத்து வாசித்து ஜெபிக்கலாம். அப்படிப்பட்ட அபூர்வ செய்தியாக அது அமைந்துள்ளது.

**V. P. பவுல் வேதமணி -** கவியக்காடு, கொடைக்கானல்

# வேத மாணிக்கம் தேசிகர்

**சருவ லோகாதிபர். நமஸ்காரம் - சருவ சிருஷ்டிகனே நமஸ்காரம்**
**தரை, கடல். உயிர். வான்**
**சகலமும் படைத்த தயாபர பிதாவே நமஸ்காரம்.**



**REV.வேதமாணிக்கம்**

கிறிஸ்தவர்கள் அதிகமாய் விரும்பி பாடும் இந்த துதிப் பாடலை எழுதியவர் அருள் திரு. **மகாராஜன் வேத மாணிக்கம்** அவர்களாகும்.

இவர் **கன்னியாகுமரி** மாவட்டத்தின் **முதல் கிறிஸ்தவர்** எனும் பெருமைக்குறியவர். **வேதமாணிக்கம் தேசிகரை** அறியாத மக்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் இல்லை எனலாம். இந்த கன்னியாகுமரி மாவட்டம் 18ம் நூற்றாண்டில் திரிவிதாங்கூர் மாகானம் என்று அழைக்கப்பட்டது. அந்த நாட்களில் கல்வியறிவு பெற்றிராத மக்கள் எண்ணிக்கைக்கு அடங்கா பலவிதமான கடவுள்களை வழிபட்டு வந்தனர். கீழ் ஜாதி பெண்கள் **மேலாடை** அணியக்கூடாது. **கணவர் இறந்தால்** மனைவியும் தீயில் விழுந்து மரிக்கவேண்டும் போன்ற பல சிக்கலான சமூக அமைப்புகளையும், **ஜாதிச்சடங்குகளும்** நிறைந்து காணப்பட்டது இந்த குமரி மாவட்டம்.

19ம் நூற்றாண்டில் கிறிஸ்தவம் **கன்னியாகுமரி பகுதிக்கு** வந்தபோதே சிக்கலான **சமூக அமைப்புகள்** சடங்குகளிலிருந்து சுமூகமான விடுதலையைக் கண்டது. **நாகரீகமும்** நலமான வாழ்வு முறையும் மக்களிடம் துளிர்விடத் தொடங்கியது. குட்டி தெங்வங்களுக்கு முன் கூனிக்குறுக்கிடந்த மக்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் தலைநிமிர ஆரம்பித்தார்கள். பெண்கள் மேலாடை அணிய அனுமதிக்கப்பட்டனர். பல **கிறிஸ்தவ ஆலயங்கள்** எழும்பினது. மறைதிரு **WT. றிங்கல்தௌபே** மற்றும் மறைதிரு **சார்லஸ் மீட்** போன்ற மிஷனரிகளின் வருகையால் பல்வேறு பள்ளிகளும், கல்லூரிகளும் தோன்றின. ஒரு காலத்தில் படிப்பறிவு பெறாத **குமரி மாவட்டம்** இன்றைக்கு 87.6 படிப்பறிவு பெற்ற மக்களால் நிரம்பியுள்ளது. இத்தகைய மாபெரும் **சமூக உயர்வுக்கு** காரணமாய் அமைந்த **வேதமாணிக்கம் தேசிகரைப்**பற்றி கிறிஸ்தவர்களாகிய நாம் நிச்சயம் அறிந்திருக்க வேண்டும்.

1750 ஆண்டுக்கு பின் மதுரநாயகம் - தேவாயி தம்பதியினரக்கு இரண்டாவது மகனாக **மயிலாடி** என்ற ஊரில் பிறந்தார் **வேதமாணிக்கம்.** ஐந்து வயதிலேயே தந்தையை இழந்த வேதமாணிக்கத்தை அவரது **தாயார்** தெய்வ பக்தியில் வளர்த்தார். சிறுவயதிலேயே **சிவ பக்தராகவும்,** உண்மை, **ஆண்மீகம்** ஆகியவற்றை **தேடும்** உயர்ந்த நாட்டம் உரையவாராகவும் இருந்தார். 1799ம் ஆண்டு **கடவுளை சந்தித்தே** ஆக வேண்டும் என்றநோக்கத்துடன் **சிதம்பரம்** என்ற இடத்தை நோக்கி **புன்னிய பயனம்** மேற்கொண்டார். அங்கு நடைபெற்ற வழிபாடுகள், அவருக்கு வெறுப்பையும், ஏமாற்றத்தையுமே தந்தன. இதனால் மனமுடைந்த அவர் ஒரு தூணில் சாய்ந்து தூங்கிவிட்டார். அப்பொழுது வெண்ணங்கி தரித்த ஒரு தூதன் தன் கணவில் தோன்றி,

நீ செல்ல வேண்டிய இடம் வேறு, புறப்படு நான் வழி காட்டுகிறேன் என்று கூற அந்த சத்தத்திற்கு கீழ்படிந்து எழுந்து புறப்பட்டார். **தஞ்சாவூர்** வந்தபொழுது **கோலாப் ஐயர்** மூலமாக மெய்தெய்வமாகிய **இயேசுவைப்பற்றி** அறிந்துகொண்டார். கனவில் தோன்றிய தூதன் தன்னை சரியான வழியில் நடத்தியிருப்பதை எண்ணி வியப்படைந்தார். சத்தியத்தை அறிந்த அவர் காலம் தாழ்தாமல் **கோலாப் ஐயர்** மூலமாக **ஞானஸ்நானம்**பெற்று **புதிய மனிதன்** ஆனார்.

20வது வயதில், **மத்திக்கோடு** சபையை சார்ந்த ராகேலை மனம் புரிந்தார் வேத மாணிக்கம். தனது உயர் படிப்பை முடித்து **அரசு அதிகாரியாக** வேலையில் அமர்ந்தார். பக்தி, விசுவாசம், மற்றும் ஜெபம் செய்வதில் அதிய வாஞ்சையுள்ளவராக விளங்கினார். உலக பொருளுக்கோ, பணத்திற்கோ மனதில் இடம்கொடாது மண்தரை போட்ட **ஓலைவேய்ந்த** குடிசை வீட்டில் வாழ்ந்துவந்தார். ஒரு நாள் **ஆங்கிலேயரான** அவரது **மேலதிகாரி** அவரை நோக்கி, வேதம் மாணிக்கம் நீ வேத ஓதவேண்டியவன் இங்கு எப்படி வேலை செய்யலாம்? என்று கேட்டார். இக்கேள்வி வேத மாணிக்கத்தின் உள்ளத்தில் பதிந்தது. ஆழ்ந்து சிந்தித்த வேத மாணிக்கம் நற்செய்தி பணியில் கொண்ட ஆர்வத்தால் உடனே **அரசு வேலையை** ராஜினாமா செய்துவிட்டு மிஷனில் ஆசிரியராகவும் பின்னர் **மிஷன் பள்ளிகளின்** ஆய்வாளராகவும் பணியாற்றினார். சிறு காலம் மத்திக்கோடு சபை **உபதேசியராக** ஊழியம் செய்த பின் 1912ம் ஆண்டு **கல்லு கூட்டம்** திருச்சபை பேதகரானார். இவர் பல கீர்த்தனை பாடல்களை இயற்றி **இன்னிசையுடன் நற்செய்தி** அளித்து வந்தார். தன் **உறவினர்** அணைவருக்கும் **கிறிஸ்துவை** பற்றி அறிவித்து அவர்களையும் **ஞானஸ்நானம்பெற** செய்தார். தன்னை வெறுத்து ஊழியம் செய்த போதகர் வேதமாணிக்கத்தின் ஆலய ஆராதனையில் மக்கள் திறள் கூட்டமாக பங்கேற்றன. அவர் சபை **வாலிபர்களை நல்வழி** படுத்த சுவிசேஷ படை யெழுச்சி என்ற திறந்த வெளி கூட்டங்களை நடத்தினார். ஞாயிறு தோறும் **மாலை நேரத்தில்** பெண்களுக்கு சிறப்பு **வேத பயிற்சி** கூட்டங்களை வீடுகளில் நடத்தினார். கன்னியமும், நேர்மையும் நிறைந்த போதகர் வேத மாணிக்கம் அவர்களை ஊர் பிரச்சனைகளை தீர்க்கும். **ஊர் கூட்ட நடுவராகவும்** சமுதாய பணி செய்தார்.

ஆண்டவரின் ஊழியபாதையில் தன்னுடையது அனைத்தையும் அற்பனம் செய்த வேத மாணிக்கத்தின்குடும்பத்தை ஆண்டவர் ஆசீர்வதித்தார். அவரது 3 பையன்களும் 3 பெண் பிள்ளைகளுக்கும் தேவன் நல்ல படிப்பு, வேலை மற்றும் இசை ஞானத்தை தந்தார். **வயலின்தான்** அவர்களது **குடும்ப வாத்தியம்.** அதில் அவர்கள் அனைவரும் மேதைகளாக விளங்கினார்கள். எனவே குடும்பமாக பல இடங்களுக்கு சென்று **நற்செய்தி கூட்டங்கள்** மூலமாக கிறிஸ்துவை அறிவித்து வந்தனர்.மேலும் ஜெர்மானிய மிஷனரி **WT ரிங்கல்தௌபே** அவர்களை கன்னியாகுமரிக்கு அழைத்து கிறிஸ்துவ பணியை செய்ய இவர் மிகவும் உறுதுணையாக இருந்தார். பின்னர் இங்கிலாந்து மிஷனரி **சார்லஸ் மீட்** என்பவருக்கும் ஊழியத்தில் துணையாகஇருந்தார்.

1827ம்ஆண்டு அருள்திரு. வேத மாணிக்கம் **மார்தாண்டத்தில்** உள்ள தனது மனைவியின் தங்கை வீட்டிற்கு செல்ல பஸ்ஸில் ஏறும்போது **தவறிவிழுந்ததில்** பேருந்து சக்கரம் அவரது காலில் ஏறி காயம் ஏற்பட்டது. அதோடேதன் பயணத்தை தொடர்ந்த அவர் **மார்தாண்டத்தில்** மூன்றாம் நாளில் **மரணம்** அடைந்தார். அவர் இயற்றிய **"ஆ. இன்ப காலமல்லோ" ஜீவ வசனம்** கூறுவோம் என்ற பாடல்களும் நம் திருச்சபை கீர்த்தனை பாடல் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன.

இயேசு **தமிழ் மக்களை** அதிகம் நேசிக்கிறார் என்பதற்கு **வேத மாணிக்கம்** தேசிகருடைய வாழ்க்கை ஓர் சான்றாகும். வேத மாணிக்கம அவர்கள் கர்த்தருடைய சமூகத்தில் இளைப்பாறினாலும் அவர் எழுதிய **பாடல்கள்** இன்றைக்கும் நம்முடைய இருதயத்தில் தவழுகின்றன. **கன்னியாகுமரி** மாவட்டத்தில் **கிறிஸ்தவர்கள்** இன்றைக்கும் **அதிக அளவில்** காணப்படுவதற்கு **வேத மாணிக்கம் தேசிகர்** தன்னுடைய வாழ்க்கையை கிறிஸ்துவின் கரத்தில் அர்பணித்த சாட்சியுள்ள வாழ்க்கையே காரணமாகும். நீங்களும் வாழ்க்கையை கர்த்தரிடம் அர்பணித்து அவருக்கு பிரியமாய் வாழ்ந்தால் உங்களைக்கொண்டும் கர்த்தர் பெரிய காரியங்களை செய்வார்.

**ஜாமக்காரனின் குறிப்பு :** இன்றைய கன்னியாகுமரி திருமண்டலத்தில் உள்ள எல்லா ஆயர்களும். **Rev. வேத மாணிக்கம்** அவர்களைப்போல் சொந்த **வீட்டிலும், சபையிலும்** சாட்சியுடன் இருந்து ஊழியம் நிறைவேற்றுகிறோமா என்று தற்பரிசோதனை செய்து இந்த புதிய ஆண்டிலிருந்து புதிய தீர்மானம் எடுப்பது எத்தனை அவசியம்.

இனி நம் திருமண்டலத்தில் எந்த ஆயர்களைப்பற்றியும், குடும்பத்தைப்பற்றியும் **சாட்சியில்லா** செய்திகள் வராதிருக்க அத்யட்சாதீன சபை மக்கள் அனைவரும் ஜெபிப்போம்.

அன்றைய மிஷனரிகள், வேத மாணிக்கம் போன்றோர் இட்ட விதைகள்தான் இன்று மிக அதிகமான மிஷனரிகளும், உலக பிரசித்திபெற்ற பிரசங்கிமார்களாக இந்தியா முழுவதும் உலக நாடுகளிலும் ஊழியம் நிறைவேற்றி ஆத்தும ஆதாயம்செய்து புதிய சபைகளை உருவாக்குகிறார்கள்.

இதன் காரணமாகத்தான் கன்னியாகுமரி அத்யட்சாதீனத்தில் சபை பிள்ளைகள் உயர்ந்த கல்வியும் பெரும் பதவிகளிலும் அமர்ந்து பெரும் செல்வந்தர்களாகவும் திகழும் ஆசீர்வாதம் பெற்றிருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது.

## வெளிநாட்டு வாழும் வாசகர்கள் கவனிக்கவும்:

‘ வெளிநாட்டுக்கு அனுப்பும் ஜாமக்காரன் பத்திரிக்கையின் ஸ்டாம்ப் விலை மிக அதிகமானதால் ஒரு ஜாமக்காரனுக்கு 51ரூபாய், 64 ரூபாய் என்று ஸ்டாம்ப் ஒட்ட வேண்டியிருப்பதால் கம்பியூட்டர் வைத்திருப்பவர்கள் உங்கள் ஜாமக்காரனை PDFல் பெற்றுக்கொண்டு அதை டவுன்லோட் செய்து வீட்டில் உள்ள யாவரும் வாசிக்கவும். மற்றவர்களுக்கும் காப்பி எடுத்து உதவவும் வேண்டுகிறேன். ஆகவே எங்கள் **இமெயில்க்கு ஜாமக்காரனை அனுப்பவும்** என்று எங்களுக்கு நீங்கள் எழுதினால் போதும். உங்கள் **இமெயில் ஐடியை** நாங்கள் குறித்துக்கொண்டு ஜாமக்காரனை **அச்சகத்துக்கு அனுப்பும் முன்பே** உங்களுக்கு **PDF வழியாக** பெற்றுக்கொள்ளலாம்.

‘ இதன்மூலம் லட்சக்கணக்கான ரூபாய்களை ஸ்டாம்ப் வாங்க செலவு செய்யாதபடி **எங்களுக்கு நீங்கள் உதவலாம்.** மற்றவர்களுக்கும் **ஜாமக்காரன்** தேவையானவர்களுக்கும் இதை அறிவியுங்கள்.

‘ இவ்விஷயத்தில் உங்கள் ஒத்துழைப்பை மிகவும் நாடுகிறேன். வெளிநாட்டில் ஜாமக்காரன் வாசிப்போர் எண்ணிக்கை **மிகவும் அதிகமாக** பெருகிவிட்டது. உங்கள் ஒத்துழைப்புக்கவும். நன்றி.

# புலம்பல்
## (வேத பாடம்)

**- Christian Messenger**

கிரேக்க மொழியிலும் லத்தீன் மொழியிலும் எழுதப்பட்ட பழைய ஏற்பாட்டில் உள்ள **எரேமியாவின் புலம்பல்** என்ற துணை தலைப்பில் இருந்து இப்புத்தகத்தின் தலைப்பு எடுக்கப்பட்டுள்ளது. "ஹேக்கியோக்ரப்பா" என்ற அழைக்கப்படும் எபிரேய வேதாகமத்தின் மூன்றாம் பகுதியின் ஐந்து சுருள்களிருந்து ஒன்றாக இப்புத்தகத்தை சேர்த்துக் கொண்டிருக்கிறது. யூதர்களின் தொழுகை ஆண்டின் குறிப்பிட்ட கால கட்டத்தில் இந்த ஐந்து புத்தகங்களில் ஒவ்வொன்றும் பாரம்பரியமாக வாசிக்கப்பட்டது. யூதர்கள் எருசலேமின் அழிவை நினைவு கூர்ந்தபோது "அப்" என்ற மாதத்தின் (ஜூலை மத்திய பகுதியில்) ஒன்பதாம் நாள் இப்புத்தகம் வாசிக்கபடும்படியாய் நியமிக்கப்பட்டது. எருசலேமின் மேல் வரவிருக்கும் அழிவைகுறித்து எரேமியா புலம்பியதாக எரேமியாவின் புத்தகத்தில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (எரே. 7:29, 8:21, 9:1, 10,20) எருசலேமின் பயங்கரமான அழிவை நேரில் கண்டவர்தான் புலம்பலின் புத்தகத்தில் அதை அத்தனை தெளிவாய் விளக்க முடியும் என்று அதை வாசிக்கும்போது உணரலாம். **எரேமியாவின்** புத்தகத்திலும் **புலம்பல்** புத்தகத்திலும் ஒரேவிதமான பல கருத்ததுக்களும் எழுத்து நடைகளும் இருக்கின்றன. தேவனுடைய ஜனத்தை தேவனது "குமார்த்தியாகிய கன்னிகை" என்று அழைக்கப்படுவதை காணலாம்.

**ஆசிரியர் பெயர் : எரேமியா** கி. மு. 586ல் ஏற்பட்ட எருசலேமின் அழிவை நேரில் கண்ட ஒரே பழைய ஏற்பாட்டு எழுத்தாளர் எரேமியா தான். அச்சமயம் தனது 50வது வயதை கடந்தவனாய் எருசலோமின் வீழ்ச்சியின் வேதனையை அனுபவித்து தன்னுடைய விருப்பத்திற்கு மாறாய் கி. மு. 585ல் எகிப்துக்கு கொண்டு செல்லப்பட்டான் (எரேமியா 41-44) அதிலிருந்து 10 வருடங்களில் எகிப்திலேயே இரத்த சாட்சியாய் மரித்திருக்கலாம்.

**மைய கருத்து** : இக்கால துன்பமும் வருங்கால நம்பிக்கையும்

**எழுதப்பட்ட காலம்** : கி. மு. 586 - 585

**திறவுக்கோல் வசனம் :** எரேமியா 2:11

**நோக்கம் :** இராஜாக்களும் மக்களும் பல நூற்றாண்டுகளாக தேவனை எதிர்ததினால் **யூதாவின்** மேல் வந்த தேவனின் **நியாய தீர்ப்பே** புலம்பலின் புத்தகம். தங்கள் பாவங்களுக்கு கணக்கு கொடுக்கும் நேரம் வந்தது. அது பயங்கரமானது. தேவன் தம்முடைய வழிகளிலெல்லாம் நீதியும் நேர்மையும் உடையவர், மாத்திரமல்ல அவரை நம்புகிறவர்கள்மேல் மனதுருக்கம் உடையவர் என்றும் எரேமியா தனது புலம்பலில் பாடுகிறான். விரக்தியின் மத்தியில் **நம்பிக்கையும்** தற்போதைய நியாயதீர்ப்புக்கப்பால், தம்முடைய மக்களுக்கு வருங்காலத்தில் தேவன் அருளஇருக்கும் **மீட்பையும்** இந்த புலம்பல் புத்தகம் அளிக்கிறது.

**புத்தக கண்ணோட்டம் :** இப்புத்தகம் ஐந்து தொடர்ச்சியான புலம்பல்களை கொண்டது (அதிகாரம் 1) எருசலேமின் நாசத்தையும் தன்னுடைய ஆத்தும வியாகுலத்தை தேவனுக்கு நேராய் எரேமியா ஏறெடுப்பதையும் வர்ணிக்கிறது. சில இடங்களில் எருசலேமுக்கு ஆள் தத்துவம் கொடுத்து அவனது புலம்பல் அமைந்துள்ளது.

(அதிகாரம் 2) எரேமியா எருசலேமின் நாசத்திற்கான காரணத்தை வர்ணிக்கிறான். மனந்திரும்ப மறுத்த கலகக்காரர்களாகிய மக்கள்மேல் வந்த **தேவ கோபமே** அந்நாசத்துக்கு காரணம்.

(அதிகாரம் 3) தேவன் இரக்கமும் உண்மையும் உள்ளவர் என்றும் **அவர்மேல் நம்பிக்கையாய் இருக்கிறவர்களுக்கு** அவர் நல்லவர் என்று தேசம் நினைவு கூறவேண்டுமென்று மூன்றாம் புலம்பல் வலியுருத்துகிறது.

(அதிகாரம் 4) முந்தின மூன்று புலம்பல்களின் கருத்துக்களை மீண்டும் வலியுறுத்துகிறது.

(அதிகாரம் 5) எரேமியா யூதாவின் பாவத்தை அறிக்கை செய்துவிட்டு தேவனுடைய இரக்கத்திற்காக கெஞ்சி, வேண்டுதல் செய்கிறான். எபிரேய மொழியின் ஆரம்ப எழுத்திலிருந்து கடைசி எழுத்துவரை பாடலின் வசனங்களின் தொடக்கத்தில் உபயோகிக்கப்பட்டிருப்பதால் இப்புலம்பல்கள் முழுமை அடைந்துள்ளன. புலம்பலுக்கு ஒரு முடிவுண்டு. அதேபோல் சிறையிருப்புக்கும் ஒரு முடிவுண்டு. எருசலேம் மீண்டும் கட்டப்படும்.

**சிறப்பு அம்சங்கள்**

தீர்க்கதரிசன புத்தகங்களிலும், சங்கீதங்களிலும் தனிப்பட்ட நபர்களின் பாடல்களும். சமுதாய புலம்பல்களும் காணப்படுவதுண்டு. ஆனால் பரிசுத்த வேதாகமத்தில் இப்புத்தகம் மட்டும்தான் துக்கம் **நிறைந்த** பாடல்களைமட்டும் தன்னிலே அடக்கியுள்ளது. கவிதை நயம் வாய்ந்தது. **எருசலேமின் அழிவை** சரித்திர ரீதியாக 2 இராஜாக்கள் 25 அதிகாரமும், எரேமியா 52ஆம் அதிகாரமும் வர்ணித்தாலும், இந்த புத்தகம் மட்டும்தான் எருசலேமின் **பயங்கர அழிவை** அனுபவித்த மக்களின் உணர்ச்சிகளைத் தெளிவாய்ப் படம்பிடித்துக்காட்டுகிறது. பரிசுத்த வேதாமத்தில் மிகவும் வல்லமை வாய்ந்த வசனங்களில் ஒன்றாகிய தேவனது **உண்மையையும், அவரது இரட்சிப்பையும்** பற்றிய வசனம் இப்புத்தகத்தின் **மையப்பகுதியில்** இருக்கிறது. (3:21-26) "புலம்பல்" புலம்பல்களோடு தொடங்கப்பட்டாலும் (1:1-2) புதிய வாழ்க்கைகான நம்பிக்கையோடும். மனந்திரும்புதலின் அறிகுறியோடும் முடிவடைகிறது. (5:16-22).

## உங்களுக்கு தெரியுமா ?

1. **இயேசுவின் நாமத்தில்** ஞானஸ்நானம் கொடுத்ததாய் **வசனமே இல்லை.** கொடுக்க சொல்லியும் **வசனம் இல்லை.**

2. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் **நாமத்தின் ஞானஸ்நானம்** கொடுத்ததாய் வசனமே இல்லை. ஆனால் பிதா. குமாரன். பரிசுத்த ஆவியின் **நாமத்தினால் ஞானஸ்நானம்** கொடுக்கும்படி இயேசு கட்டளையிட்டார்.

3. பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகியோரின் நாமம்தான் இயேசு என்றார் "இயேசுவாகிய **என் நாமத்தில்** ஞானஸ்நானம் கொடுங்கள் என்று இயேசு கட்டளையிட்டு இருக்கலாமே ! அப்படி அவர்கள் சொல்லவில்லை.

4. இயேசுவின் **நாமம்** தரித்து. இயேசுவாகிய **வசனத்ததால்,** இயேசுவின் **இரத்தத்தால் கழுவப்பட்டுதான்** ஒருவன்சீஷராகிறான் அதன்பின்தான் **தண்ணீர் ஞானஸ்நானம்** பெறுகிறான்.

5. **நாமம்** என்ற பெயர் மட்டுமல்ல "**அதிகாரம், வல்லமை, குணாதிசயம்,** வசன ஜீவன், மகிமை, மாட்சிமை, கிருபை என்று பல அர்த்தங்கள் உண்டு. நன்றி **விசுவாச முழக்கம்**

**எச்சரிக்கை!** **எச்சரிக்கை!!**

# ANGEL TV ன் அபாயம்

நன்றி Pastor P. S. Gnanamuthu
(Key of the Holy Bible)

## பாமர தனமான வியாக்கியானங்கள்

தமிழ்நாட்டு TV சேனலில், கிறிஸ்தவ TV சேனலான Angel TVயை சகோ.சாது செல்வராஜ் அவர்கள் நடத்துகிறார். அவர் நடத்தும் Angel TV நிகழ்ச்சியில் பிழையான வியாக்கியானங்கள் கொடுக்கப்படுகிறது, அது சகோ.சாது செல்வராஜ் அவர்களின் அறியாமையை காட்டுகிறது. வெளி 7:1ல் **நான்கு காற்றுகளை** தன்கைகைகளில் பிடித்திருந்த தூதர்களைப்பற்றி, சாது அவர்கள்கூட அமர்ந்திருக்கும் **தலையாட்டி** சகோதரனிடம் கூறினபோது அந்த **தலையாட்டி** தம்பி சாதுவிடம் ஐயா **காற்றுகளை** எப்படி ஐயா **கையில் பிடிக்க** முடியும் ? என்று கேட்கிறார். அதற்கு சாது முடியாதுதான் ஆனால் வேதாகமத்தில் எழுதியிருக்கிறதை நாம் **நம்பித்தானே** ஆகவேண்டும் என்று பதில் கூறுகிறார்.

அட **வேத வசன மண்டுகளே** இதற்கு கூடவா உங்களுக்கு அர்த்தம் தெரியவில்லை? காற்றை கையில் பிடித்திருக்கிறார் என்றால் காற்றின் மீதுள்ள அதிகாரம் அவர்களிடம் தரப்பட்டிருக்கிறது என்று தான் அர்த்தம். **அவர் சொற்படி** செய்யும் பெரும் காற்றே என்றும் கர்த்தர் சமுத்திரத்தின் மீது **பெரும் காற்றை** வரவிட்டார் என்பதும், **காற்றின் மீது அதிகாரம்** உடைய தூதர்களுக்கு கர்த்தர் தந்த கட்டளை என்பதுதான் அதன் பொருள். யோ.1:4, சங் 103:20 ஐ எடுத்து வாசித்துப்பாருங்கள். **பாமர தனமான** இதுபோன்ற விளக்கங்களை தரவா ஆண்டவர் இந்த Angel TV சேனலை துவங்க சொன்னார்.

மகா அலெக்ஸாண்டர் உலகம் முழுவதையும் **ஒரு குடையின் கீழ்** கொண்டுவர வேண்டுமென்று எண்ணினார் என்று சரித்திரம் சொல்லுகிறது. அப்படியானால் **ஒரு குடைக்குள்** உலகம் முழுவதையும் கொண்டுவர முடியுமா என்று கேட்கும் அதி புத்திசாலிகளுக்கு ஒப்பான நபர்தான் இந்த சாது செல்வராஜ் அவர்களும், அவரோடு அமர்ந்துள்ள தலையாட்டி தம்பியும் ஆகும்.

## ANGEL TVயின் ஆபத்து:

**ஜாமக்காரன்:** சிறுபிள்ளைகள் தரிசனம் காண்பார்கள்,வயிற்றில் இருக்கும் குழந்தை தீர்க்கதரிசியாக மாறும். ஏஞ்சல் டிவி கர்ப்பிணிகளுக்குகென்று நடத்தும் ஜெபத்தில் கலந்துக்கொள்ள காணிக்கை, அந்த ஜெபத்துக்கு கர்ப்பிணி பெண்களின் காத்திருப்பு பட்டியல் என்று இவர்கள் அறிவிக்கும் செய்திகள் பொய் தீர்க்கதரிசனமாகும். சிறுபிள்ளைகளிடம் அவர்கள் படுக்கைக்குபோகும்முன் பெற்றோர் அவர்களிடம் இரவு செப்பனத்தில் தூதன் வருவான்,இயேசு வருவார் என்று கூறி சொப்பனத்தில் நீங்கள் இவைகளை பார்த்தால் அடுத்த நாள் எங்களிடம் அவைகளை அறிவிக்கவேண்டும் என்று பெற்றோரை இவர்கள் தவறான பாதைக்கு அழைத்து செல்கிறார்கள். ஏஞ்சல் டிவியின் இப்படிப்பட்ட பாவஅறிவிப்பு, பல சிறு பிள்ளைகள் மனநோய்க்கு ஆளானார்கள் என்ற செய்திகள் மிகவும் ஆபத்தானவை, சிறுபிள்ளைகளை ஏஞ்சல் டிவியை பார்க்க அனுமதிக்க வேண்டாம். ஜாக்கிறதை!

# மூன்று பெரிய பாவங்கள்

பாவங்கள் ஏராளம் இருக்கும்போது மூன்று பாவங்கள் என்றால் என்னவென்று ஆச்சரியப்படவேண்டாம். குறிப்பான மூன்று பாவங்களை குறித்து அறிந்திருப்பது நல்லது.

1. **பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவம்**
2. **மன்னிக்கபட முடியாத பாவம்**
3. **மரணத்துக்கு ஏதுவான பாவம்**

இம்மூன்றை குறித்தும் நாம் தெளிவாக படிப்பதும் அறிந்திருப்பதும் நல்லது. இவ்வறிவு விசுவாசிகளுக்கும் அவிசுவாசிகளுக்கும் மிகவும் பயனுள்ள பாடமாகும். இவற்றை தெளிவாக அறிவதின் மூலமாக நமக்கு ஏற்படக்கூடிய பல தேவையற்ற சந்தேகங்கள் மறையும். கர்த்தருடைய வசனத்தின் மூலம் நம்முடைய விசுவாசத்தை இன்னும் அதிகமாக உறுதிபடுத்தலாம்.

## 1. பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவம் :

**இப்பாவம்** என்ன **அல்ல** என்பதையும் நாம் திட்டமாக அறிந்துகொள்ளவேண்டும். நம்மில் அனேகர் ஆவியானவர் திருத்துவத்தில் ஒருவர் **அல்ல** என்று கூறக்கூடும் அல்லது ஆவியானவர் தேவன் அல்ல என்று கூறலாம். இவர் ஒரு **நபர்** அல்ல. ஒரு **சக்தி** மட்டுமே என்று நினைக்கலாம். ஆவியின் **வரங்கள்** ஆசீர்வாதங்கள் ஆகியவற்றை ஒத்துக்கொள்ளாமல் இருக்கலாம். ஆவியின் அபிஷேகம், ஞானஸ்நானம், நிறைவு,அன்னிய பாஷை போன்ற வரங்கள் இவற்றைப்பற்றி பல குழப்பமான அபிப்ராயங்கள் உடையவர்களாய் இருக்கலாம். மேலே குறிப்பிட்ட இவை ஒன்றும் ஆவியானவருக்கு விரோதமான பாவம் அல்ல. மேலும் இப்பாவத்தை **ஆவியானவருக்கு விரோதமான தூஷணம்** என்றும் கூறப்பட்டுள்ளது. ( மத். 12:31, 32. மாற்கு 3:28, 29, லூக்கா 12:10) ஆகிய வசனங்களில் இப்பாவத்தைப்பற்றி கூறப்பட்டுள்ளது.

ஆண்டவர் இதைக்குறித்து கூறிய **சந்தர்ப்பத்தையும்** கவனிக்கவேண்டும். ஆண்டவர் இப்பூமியல் இருந்தபோது பிசாசு பிடித்த குருடும் ஊமையுமான ஒருவனை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். குருடும் ஊமையுமான அவன் பேசவும் காணவும்தக்கதாக இயேசு அவனை சொஸ்தமாக்கினார். ஜனங்கள் எல்லோரும் தாவீதின் குமாரன் இவர்தானோ என்று ஆச்சரியப்பட்டார்கள். பரிசேயர் அதை கேட்டு இவன் **பிசாசுகளின் தலைவனாகிய** பெயல்செபுலினாலே **பிசாசுகளை** துரத்துகிறானே அல்லாமல் **மற்றபடி அல்ல** என்றார்கள். இவ்வாறு கிறிஸ்து ஆவியின் வல்லமையினால் பிசாசுகளை துரத்தும்போது ஆவியானவரின் அந்த கிரியையை பெயல்செபுலன் கிரியை என்று துணிந்து கூறினார்கள். பரிசேயர் இயேசு கிறிஸ்துவையையும் அவருடைய வல்லமையையும் அறிந்திருந்தும் மனப்பூர்வமாய் **ஆவியானவரை** பெயல் செபுல்(பிசாசு) என்றார்கள். இதுவே அவர்கள் ஆவியானவருக்கு விரோதமாய் சொன்ன **தூஷணமாய்** இருந்தது. இந்த நிகழ்ச்சியை தெளிவாக மனதில் வைத்து சிந்திக்க வேண்டும். (1). இது **பரிசேயர்** கூட்டத்தார் செய்த பாவம். (2). இது ஆண்டவர் **சரீர பிரகாரமாக** இவ்வுலகில் ஜீவித்த நாட்களில் அக்கால கட்டத்தில் வாழ்ந்த அம்மக்கள் செய்த பாவம் ஆகும்.

ஆகவே **அந்த பாவத்தை** இன்று நாம் அதே நிலையில் செய்ய இயலாது. காரணம் ஆண்டவர் **சரீர பிரகாரமாக** இப்போது நம்மிடையே இல்லை. மேலும் அவர்கள் ஆண்டவரை அறிந்தும் நன்றாக அவர்கள் மனப்பூர்மாக செய்த பாவம் ஆகும். இப்பாவத்துக்கு **விளக்கம்** கொடுக்கும்போது திட்டமாக வேதத்தின் இதர பகுதிகளில் கூறப்பட்டிருக்கும் **சத்தியங்களுக்கு** பாதகம் இல்லாமல் நாம் சிந்திக்க வேண்டும். இவர்கள் **பரிசேயர்** கூட்டத்தவர்கள் என்று பார்த்தோம். ஆனால் அப்போஸ்தலனாகிய பவுலும் ஒரு பரிசேயன். ஆண்டவருக்கும் கிறிஸ்தவ சபைக்கும் எதிராக செயல்பட்டவன். ஆயினும் அவைகளை அவன் அறியாமல் செய்ததாகதான் நாம் காண்கிறோம். முன்னே நான் தூஷிக்கிறவனையும் **துன்பபடுத்துகிறவனையும்** கொடுமை செய்கிறவனையும் இருந்தேன் என்று பவுல் அறிக்கையிடுகிறார்.

அப்படியிருந்தும் நான்அறியாமல் **அவிசுவாசத்தினாலே** அப்படி செய்தபடியால் கர்த்தரின் **இரக்கம்** பெற்றேன் என்றார்.( 1தீமோ. 1:13) யூதர்கள் பலரும் கொரிந்துவில் பவுல் வந்தபோது எதிர்த்து **தூஷித்தபோது** பவுல் தன் வஸ்திரங்களை கிழித்துக்கொண்டு உங்கள் இரத்த பழி உங்கள் தலையின்மேல் இருக்கும் என்றான் (அப். 18:6) இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை இரட்சிக்கும் என்பதுதான் உண்மை. இவர் சர்வ லோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாய் இருக்கிறார். (1 யோ. 1:7, 2:2) ஆகவே தெரிந்தும் மறுதலிக்கிறவர்களை மனந்திரும்புவதற்கு ஏதுவாய் **மறுபடியும் புதுப்பிக்கிறது** கூடாத காரியம். (எபி. 6:6) ஆண்டவர் மன்னிக்க மனமில்லாதவரோ அல்லது முடியாதவரோ அல்ல. மனந்திரும்ப மனதில்லாமல் மனப்பூர்வமாக ஆவியானவர் எதிர்க்கிறவர்களையும், தூஷிக்கிறவர்களையும் **ஆண்டவர் மன்னிப்பது எப்படி?.** எனவே இனறைய காலகட்டத்தில் நாம் யாராயினும் அப்படியொரு மன்னிக்கபட முடியாத பாவத்தை செய்துவிட்டேனே என்று **மனம் குழம்**ப வேண்டாம். ஆண்வரிடம் நாம் **மன்னிப்பு கேட்கும்போது** ஆண்டவரால் **மன்னிக்க முடியாத எந்த பாவமும்** இந்த உலகில் இல்லை என்பதை அறிய வேண்டும்.

### 2.மன்னிக்க முடியாத பாவம் :

அப்படி ஒரு பாவம் இருக்கிறதோ ? அதையும் நாம் அறிய வேண்டும். பொதுவாக எல்லா பாவங்களையும் **தேவன் மன்னிப்பார்** என்பது உண்மை ஆயினும் **ஒரே ஒரு பாவத்தை** மட்டும் மன்னிப்பதில்லை. ஆகவே அதைதான் **மன்னிக்க முடியாத பாவம்** என்று கூறுகின்றோம். எல்லா பாவங்களும் **தண்டனைக்குறியதே.** பாவத்தின் சம்பளம் **மரணம்** என்றும், பாவம் செய்கிற ஆத்துமா **சாகும்** என்றும் வேதம் திட்டமாய் அறிவிக்கிறது. மனிதனின் சகல பாவங்களுக்கும் மன்னிப்பு வேண்டும். ஆகவே அதற்காகவே தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை இவ்வுலகுக்கு மரிப்பதற்கென்றே அனுப்பினார். நம் மீதான எல்லா பாவங்களுக்கும் நியாயமாய் நமக்கு வரவேண்டிய தண்டனையை முழுவதும் தேவன் அவர்மேல் சுமத்தி அவரை சிலுவைக்கு ஒப்புக்கொடுத்தார். ஆகவே மனுக்குலம் முழுவதுக்கும் அவர்கள் செய்த எல்லா பாவங்களுக்கும் **மன்னிப்பை** வழங்க **அவருடைய மரணம்** போதுமானதாகும். மனிதன் தான் செய்த பாவங்களுக்காகவே அவர் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்தெழுந்தார் என்று இருதயத்தில் விசுவாசித்தால், அப்படி விசுவாசிக்கிறவன் அவன் செய்த **எல்லா பாவங்களும்** மன்னிக்கப்படும். அவரை விசுவாசிக்காவிட்டால் **நம் பாவங்கள்** மன்னிக்கப்படுவதில்லை. அவரை விசுவாசிப்பது ஏன் அவ்வளவு முக்கியம் என்றால் அவர் யாராய் இருக்கிறார் என்பதை அறிந்துகொள்வது மிக முக்கியம்.

1. அவர் **உலகத்தை** படைத்தவர் (கோலோ. 1:16)

2. **மாம்சத்தில்** வெளிப்பட்ட **தேவன்** (யோ 1:14, தீமோ 3:16) **பாவிகளை** இரட்சிக்க **வந்தவர்** (1 தீமோ. 1:15) ஒரே **இரட்சகர்** (அப். 4:12) **மனிதனுக்கு** பதிலாக **மரித்தவர்** (1. பேதுரு 3:18) **பாவிகளுக்காய்** மரித்தவர் (ரோமர் 5:8) **மரணத்தை ஜெயித்தவர்** (மத் 28:6) **வரக்கூடிய** நியாயாதிபதி ( யோ 5:17. அப். 17:31)

ஆகவே இப்படிப்பட்ட **இயேசு கிறிஸ்துவை** குணாதிசயங்களை உடைய ஒருவர் ஆகும். விசுவாசிக்காவிட்டால் **பாவ மன்னிப்பும்** இரட்சிப்பும் இல்லை. இதுவே மன்னிக்க முடியாத பாவம்.

## 3. மரணத்துக்கு ஏதுவான பாவம் என்றால் என்ன ?

**தேவனுடைய பிள்ளைகள்** தவறு செய்யும்போது அல்லது **பாவம்** செய்யும் போது தேவன் **நம்மை தள்ளிவிடாமல்** நம்மை சிட்சித்து சீர்படுத்த விரும்புகிறார். திருவிருந்தில் தகாத விதமாக அப்பத்திலும் ரசத்திலும் பங்கு பெறக்கூடாது என்று நாம் அறிவோம். அச்சமயத்தில் நம்மில் நாம் ஏதாவது குறைக்கண்டால் திருவிருந்து எடுக்காமல் ஒதுங்கி இருக்கவேண்டும் என்று வேதத்தில் கூறப்படவில்லை. எந்த மனுஷனும் **தன்னை தானே சோதித்து** அறிந்து இந்த அப்பத்தில் புசித்து இந்த பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன் என்று கூறப்பட்டுள்ளது. குறை இருக்குமானால் நாம் ஆண்வரிடம் அறிக்கை செய்து பாவ மன்னிப்பை பெற்றுக்கொண்டு உடனே திருவிருந்தில் பங்குகொள்ளவேண்டும். இல்லையேல் அதனால் **வரும் சிட்சைகளை** குறித்து வேதம் கூறும்போது **மூன்று காரியங்கள்** கூறப்பட்டுள்ளது.

மூன்றுவிதாமன தண்டனை என்னவென்றால் **பெலவீனம், சுகவீனம், நித்திரை (மரணம்).** இது **சரீர மரணத்தை** காட்டுவதாகும். 1 கொரி. 5:2ல் பவுல் கூறியிருப்பதையும் பாருங்கள். **பாவம் செய்தவனுடைய ஆவி** கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாளில் இரட்சிக்கப்படும்படி மாம்சத்தின் அழிவுக்காக நம்முடைய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் **அவனை சாத்தானுக்கு ஒப்புகொடுக்கவேண்டும்** என்று தீர்ப்பு செய்கிறேன் என்றார். எனவே இது சரீர மரணத்தை மட்டுமே காட்டுவதாகும். இக்கருத்தையே 1 யோ. 5:16, 17 வசனங்களில் யோவான் கூறியிருக்கிறார். ஆகவே ஒரு விசுவாசி தொடர்ந்து பாவ வாழ்க்கையில் **நிலைத்திருந்தால்** அவன் தேவநாமத்துக்கு மகிமை குறைச்சலை உண்டு பண்ணிக் கொண்டிருந்தால் அவன் இனிமேல் **பூமியில் இருந்தது போதும்** என்று ஆண்டவர் அவனை தன்னிடம் அவன் **மரணம் மூலம்** சேர்த்துக்கொள்வார். இது குறிப்பான ஒரு குறிப்பிட்ட பாவத்தைப்பற்றி கூறுவது அல்ல.

ஆகவே "**பரிசுத்த ஆவிக்கு** விரோதமான பாவம் அல்லது தூஷணம்" என்பது கிறிஸ்து பூமியில் ஜீவித்த நாட்களில் **பரிசேயர்** செய்த பாவம்.

மன்னிக்கப்பட கூடாத பாவம் என்பது **எல்லா அவிசுவாசிகளும்** செய்த பாவம். மரணத்துக்கு ஏதுவான பாவம் என்பது **விசுவாசிகளின் பாவம்.**

இவற்றை தெளிவாக புரிந்துகொள்ள தேவன் தாமே கிருபை செயவாராக.

**சகோ. ஜோன்ஸ்**

# திருமதி. சசிகலாவுடன் CSI பிஷப் ஆயர்களின் சந்திப்பு

AIADMK கட்சி பொதுச்செயலாளர் திருமதி சசிகலா அவர்களை சென்னை CSI திருமண்டல பேராயர்,ஆயர்கள் பொருப்பாளர்களின் சந்திப்பு .

சசிகலா அவர்கள் தமிழ்நாட்டு **முதல்வர்** ஆனவுடன் இவர்களின் சந்திப்பு நடந்திருந்தால் அதில் அர்த்தம் உண்டு. ஆளுகிறவர்களுக்கு மரியாதை செலுத்தவும், அவர்களுக்காக ஜெபிக்கவும் நம் வேதம் நம்மை படிப்பிக்கிறது. ஆகவே வாழ்த்த சென்றோம் என்றால் தவறில்லை.




தமிழ்நாட்டு பல்கலைக்கழக துணைவேந்தர்கள் அனைவரும் திருமதி சசிகலாவை AIADMK பொதுச் செயலாளராக தெரிந்தெடுப்பதற்கு முன்பே நேரில் போய் சந்தித்ததை தமிழ்நாடும். மீடியாக்களும் தலைவர்களும் தங்கள் எதிர்ப்பை அறிவித்தது அன்று அவர்கள் சந்திப்பில் உள்நோக்கம் இருந்தது.

**ஆனால் கிறிஸ்தவ சபை பிஷப், ஆயர்களின் இந்த சந்திப்பு எதற்கு?**

ஏற்கனவே தென்னிந்திய திருச்சபை முழுவதும் **மத்திய அரசு, CBI உளவுதுறை, வருமான வரி துறை** ஆகியவற்றின் **கண்காணிப்பு** வளையத்துக்குள் வந்து பரிசோதனைகள் துவங்கப்பட்டுள்ள நிலையில் சசிகலாவுடனான இந்த சந்திப்பில் உள்நோக்கம் உண்டோ என்று CSI ஆயர்கள் மற்றும் விசுவாசிகள் சந்தேகப்படுகிறார்கள். அப்படியே தூத்துக்குடி-மதுரை,கன்னியாகுமரி பேராயர்களும் சசிகலா அவர்களை நேரில் சந்தித்து ஆசி பெற்றனர் என்று பத்திரிக்கை செய்தியில் காணப்பட்டதாக செய்தி வந்துள்ளது.

**காலில் விழும் காட்சி** இன்னும் அரங்கேரவில்லை என்று எண்ணுகிறேன். அதுவரை நம் கிறிஸ்தவர்களின் மரியாதை காக்கப்பட்டுள்ளது. அனைத்து CSI சபைகளுக்காக சபை தலைவருக்காக தொடர்ந்து ஜெபிப்போம்.



Most Rev. Thomas K. Oommen

**வாழ்த்துகிறோம்!** **வரவேற்கிறோம்!!**

## CSI புதிய மாடரேட்டார்:

CSI சபைகளின் சினாட் கூட்டம் கோட்டயத்தில் நடந்தேறியது. அதில் இப்போது டெப்டி மாடரேட்டராக பதவி வகிப்பவரும்,மத்திய கேரளா CSI டையோசிஸ்ஸின் பிஷப்பாக இருப்பவருமான **Rt.Rev.Thomas K.Oommen** அவர்கள் எல்லாரும் எதிர்ப்பார்த்தபடி புதிய மாடரேட்டராக தெரிந்தெடுக்கப்பட்டார்.

**புதிய மாடரேட்டர்** அவர்களை ஜாமக்காரன் வாசகர்கள் சார்பிலும், என் சார்பிலும் வாழ்த்துக்கள் கூறுகிறோம். இவர் பதவி காலத்தில் பிஷப் பதவியில் ஒருவரை நியமிக்க பணம் வாங்கி குறுக்குவழியில் நியமனம் செய்யமாட்டார் என்று பலர் பேசிக்கொள்வது கேட்க சந்தோஷமாக இருக்கிறது. புதிய மாடரேட்டருக்காக ஜெபிப்போம்.

**டெப்டி மாடரேட்டராக** ஆந்திர மாநிலத்தில் **டோர்னகல்** CSI டையோசிஸ் பிஷப் Rev.Vadappalli Prasada Rao அவர்கள் டெப்டி மாடரேட்டராக தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார். அவரையும் வாழ்த்துகிறோம். அவர்களுக்காகவும் ஜெபிப்போம் **- ஜாமக்காரன்**

JANUARY 2017

# Printed Book/Book Post

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.